விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 029 வள்ளுவர் ஆண்டு 2057 தை 03 சனிக்கிழமை (17.01.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

Jaffna International Trade Fair
யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
16th EDITION
JITF 2026
JANUARY ஜனவரி 23 24 25
10.00மு.ப - 8.00பி.ப
Muttraweli Grounds முற்றவெளி மைதானம்
இன்னும் 6 நாட்களில்
ORGANIZED BY LECS LANKA EXHIBITION

# போதைப்பொருள் அச்சுறுத்தலை முற்றாக ஒழிக்க அனைவரும் முன்வாருங்கள்



## யாழில் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு

- வடக்கில் கிராமப்புற வீதி அபிவிருத்திக்கு 5 ஆயிரம் மில்லின் ரூபாய் ஒதுக்கீடு.
- இந்த வருடம் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கத் தீர்மானம்.
- அரச துறையில் 75 ஆயிரம் பேரை இணைக்க முடிவு. 04ஆம் பக்கம் பார்க்க



### யுத்தத்தில் இடம்பெயர்ந்த மக்களின்

# வீட்டுப் பிரச்சினை தீர்க்கப்படும் - அநுர

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் இடம்பெயர்ந்த அனைத்து மக்களின் வீட்டுப் பிரச்சினையும் எமது பதவிக்காலத்தில் தீர்க்கப் படும் என ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## நயினைத்தாயை வழிபட்டார் ஜனாதிபதி



15ஆம் பக்கம் பார்க்க

### தலை மீது

## தேங்காய் விழுந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

தலைமீது தேங்காய் விழுந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று மரணமடைந்துள்ளார். கோப்பாய் வடக்குப் 15ஆம் பக்கம் பார்க்க

# உள்ளக விளையாட்டரங்கு; சர்வதேச கிரிக்கெட் மைதானம்


### வேலைத்திட்டங்களை விரைவுபடுத்துக; யாழ்.அரச அதிபருக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள் ளக விளையாட்டரங்கு மற் றும் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தின் வேலைத் திட்டங்களை விரைவுபடுத்து மாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஜனாதிபதி அநுர 15ஆம் பக்கம் பார்க்க

### தேசிய வீடமைப்பு வேலைத்திட்டம்

## ஜனாதிபதி அநுரவினால் யாழில் ஆரம்பித்து வைக்கப்பட்டது



(சாவகச்சேரி)

"தமக்கான இடம் - அழ கான வாழ்க்கை" எனும் தொனிப்பொருளிலான தேசிய வீடமைப்பு வேலைத் திட் டத்தை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க யாழ். 15ஆம் பக்கம் பார்க்க

## பலாலி, காங்கேசன்துறையை புனரமைக்க நடவடிக்கை

### ஜனாதிபதி அநுர

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலை யம் மற்றும் காங்கேசன்துறை துறைமுகப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள் ளார்.

சாவகச்சேரி மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாட சாலை 15ஆம் பக்கம் பார்க்க

### எச்சரிக்கை

## யாழில் இணைய மோசடிகள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இணை யம் மூலம் மேற்கொள்ளப் படும் மோசடிகள் அதி கரித்துள்ளன.

15ஆம் பக்கம் பார்க்க

## நயினாதீவு விகாராதிபதியுடன் ஜனாதிபதி அநுர கலந்துரையாடல்



15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவற[illegible]க்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வீட்டுப் பிரச்சினை...

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மீசாலை, வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்விலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரி வித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, யுத்தத்தினால் பெருமளவான வீடுகள் சேதமடைந்தன. நீண்டகாலம் சென்ற போதும் அந்த வீடுகள் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டு நிறைவு செய்யப்படவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்தில் வாழும் அநேகமானோர் யுத்த சமயத்திலும் இடம்பெயர்ந்திருந்தார்கள். யுத்தத்தின் பின்னரும் இடம் பெயர்ந்திருந்தார்கள்.

நீண்டகாலமாக தமக்கென வீடோ, இடமோ இன்றி அவர்கள் வாழ்வது நியாயமல்ல. ஆட்சிக் காலத்திற்குள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்துள்ள அனைத்து மக்களினதும் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதே எனது எதிர்பார்ப்பாகும். இந்த பிரதேச மக்கள் பெரும் எதிர்பார்ப்புடன் எமது அரசாங்கத்தை உருவாக்க பங்களித்தார்கள். ஆட்சியில் இருக்கும் தரப்பினருக்கு எதிரான மற்றும் உடன்பாடற்ற நிலைப்பாடே நீண்ட காலமாக இங்கு காணப்பட்டது. அதில் தவறில்லை.

அரசாங்கம் இனவாதத்தை போசிப்பதாகவோ மக்களின் சொத்துக்களைத் திருடுவதாகவோ பொது மக்கள் குறித்து சிந்திக்காமல் இருந்தாலோ அல்லது அரசாங்கம் தம்மைப்பற்றி மாத்திரமே சிந்திப்பதாக இருக்குமாயின் அரசாங்கமும் மக்களும் தூரமாவதை தடுக்க முடியாது. ஏனென்றால் அவை மக்களுக்கு எதிரான முரண்பாடுகளை உருவாக்கும் அரசாங்கங்கள். தங்களையும் தங்கள் குடும்பத்தையும் பற்றி மாத்திரம் சிந்திக்கும் அரசாங்கங்களாகவே அவை இருந்தன. ஆனால் இலங்கை வரலாற்றில் முதன்முறையாக நாட்டின் பொதுமக்களின் அரசாங்கம் உருவாக்கப்பட்டது. தேர்தல் சமயங்களில் மக்களின் மனங்களில் குறிப்பாக வடபகுதி மக்களிடையே எம்மைப்பற்றி குழப்பமும் தெளிவின்மையும் இருந்திருக்கும்.

எம்மை ஆட்சிபீடமேற்ற வாக்களித்தாலும் சந்தேகத்துடன் தான் வாக்களித்திருக்கலாம். எமது அரசாங்கம் உருவாகி ஒரு வருடத்திற்கு சற்று கூடுதல் காலம் சென்றுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நீங்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய அரசாங்கம் முதன்முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. முதலில் கீழ் மட்டத்தில் உள்ள மக்களின் கஷ்டங்களை தீர்க்க வேண்டும். அரசாங்கமென்ற வகையில் எம்மால் முடிந்த அனைத்தையும் செய்வோம். வீடற்றவர்களுக்கு வீட்டை வழங்க நடவடிக்கை எடுப்போம். பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்க வேண்டும். வரலாற்றில் அதிக தொகையை அதற்காக ஒதுக்கியுள்ளோம் என்றார். (ம-7)


## மரண அறிவித்தல்



தோற்றம்
24 - 08 - 1963

மறைவு
14 - 01 - 2026

### ரவீந்தினி பத்மநாதன்

யாழ்ப்பாணம் சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ரவீந்தினி பத்மநாதன் அவர்கள் கடந்த 14.01.2026 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தியாகராசா - பூமாதேவி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நிற்சிங்கம் - நாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகளும் சற்குணசிங்கம், கோபிநாத், சுமன், கிருஸ்ணதாசன், லோகிதா, புவிராஜ் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுசீலாதேவி, லலிதா, விமலா, சுமதி, ஜெயரூபி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
0778811026

(C-4827)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் இயங்கி வரும் உணவகம் ஒன்றிற்கு

- Room boy
- சமையல் உதவியாளர்
- சுத்தப்படுத்தும் பணியாளர்

(6585)

தேவை ஆண், பெண் இருபாலாரும் இன்றே அழையுங்கள்

தொடர்பு: 075 254 9186

வலம்புரி விளம்பரத் தொடர்புக்கு 076 636 3378 | 076 097 3127

## நினைவேந்தல்



அமரர் நாகரத்தினம் செல்வரத்தினம்

மலர்வு 28.09.1937
உதிர்வு 14.12.2025

*உங்களது நினைவுகளை நெஞ்சில் சுமந்து நிற்கிறோம். எங்களுக்காக நீங்கள் செய்த நற்காரியங்கள் என்றும் மறக்கத்தக்கவையன்று. எங்களுடைய வாழ்க்கையில் இருந்து மறைந்து விட்ட உங்களது நினைவுத்துயர் சுமந்து, வணங்கி நிற்கும் நாங்கள் :*

மக்கள் செல்வகுமார் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சதீஸ்குமார் (கனடா), சுரேஸ்குமார் (பிரான்ஸ்), கிருசாந்தி (இங்கிலாந்து), துஸ்யந்தி (இங்கிலாந்து), மருமக்கள் கௌரி (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சுபஷினி (கனடா), வானதி (பிரான்ஸ்), லோகேந்திரா மற்றும் சிவரஞ்சன் (இங்கிலாந்து). சகோதரர்கள் சுந்தரலிங்கம் (இங்கிலாந்து), மனோன்மணி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்), சறோசா (கனடா), சிவராசா (ஜேர்மனி) இந்திராணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) மற்றும் பேரர்களும் பேத்தியருமான இலக்கியா (வங்கி அலுவலர்), ஆதுளன் (மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), கனடாவில் வசிக்கும் தனுசன், தயூபன் பிரான்சில் வசிக்கும் சாகித்தியன், சங்கீதன், தமிழினி இங்கிலாந்தில் வசிக்கும் சிந்தியா, லக்ஸியா, கீரன், யுகா.

"கௌரிவாசம்"
இணுவில் மேற்கு, இணுவில்.

(6584)

குடும்பத்தினர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கிற்கு விஜயம் செய்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க












வல்வை உதய சூரியன் கழகமும் வல்வை விக்னேஸ்வரா சனசமூக சேவா நிலையமும் இணைந்து ஏற்பாடு செய்த விநோத தொழில்நுட்ப பட்டத் திருவிழா நேற்று முன்தினம் வியாழக்கிழமை வல்வெட்டித்துறை உதய சூரியன் கடற்கரையில் நடைபெற்றது.

குறித்த பட்டத் திருவிழாவில் 1 ஆம் இடத்தை அச்சிலேட்டர் (துரையிலும் நீரிலும் வாழக்கூடிய உயிரினம்) பட்டம் பெற்றுக் கொண்டது.

(படம்:மகாலிங்கம்)

# 'நினைவில் நாடுள்ளவன்' கவிதை நூல் வெளியீடு

(கிளிநொச்சி)

தமிழ்தேசியக் கலை இலக்கியப் பேரவை, கிளிநொச்சி மாவட்ட விவாதிகள் கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஈழ எழுத்தாளர் தீபச் செல்வனின் "நினைவில் நாடுள்ளவன்" கவிதை நூல் வெளியீடு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபை புதிய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பாரளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், றீச்சா நிறுவுனர் கந்தையா பாஸ்கரன், எழுத்தாளர் திருமதி.திலினா வீரசிங்க ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போதைப்...

யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயற்பாட்டின் வட மாகாண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, "முழு நாடுமே ஒன்றாக" தேசிய வேலைத்திட்டம் போதைப்பொருள் அச்சுறுத்தலை ஒழிப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் மாத்திரமன்றி, அதற்கு ஆளான பிள்ளைகளுக்கு புனர்வாழ்வளித்து, அவர்களுக்கு சிறந்த தொழிற் பயிற்சி வழங்கி, கிராமத்திற்கும் நாட்டிற்கும் பயன்மிக்க பிரஜைகளாக மாற்றுவதற்கான தேசிய வேலைத்திட்டமாகும் என்றும் தெரிவித்தார்.

மேலும் வட மாகாணத்தில் கிராமப்புற வீதிகளின் அபிவிருத்திக்காக கடந்த ஆண்டு 5,000 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும் இந்த ஆண்டும் அதிக தொகை ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அந்தப் பணத்தை முறையாகப் பயன்படுத்தி மக்கள் அந்த அபிவிருத்திப் பலன்களைப் பெறுவதை உறுதி செய்ய அரசியல் வாதிகளும் அரச அதிகாரிகளும் பங்களிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

வடக்கு இளைஞர்கள் ஒரு காலத்தில் யுத்தத்தில் சிக்கி பெரும் அழிவைச் சந்தித்தனர். பெற்றோர் தமது பிள்ளை குறித்து சந்தேகத்துடன் வாழும் நிலை ஏற்பட்டது. யுத்தம் நிறைவடைந்து குறுகிய காலத்தில் போதைப்பொருளுக்கு அடிமையாகும் நிலை ஏற்பட்டது.

இதனைத் தோற்கடிப்பதில் பொலிஸாரும் பாதுகாப்புப் படையும் உறுதியாக உள்ளனர். எமக்கு மக்களின் உதவி தேவை. போதைக்கு அடிமையானவர் யார் என ஊர்மக்களுக்குத் தெரியும். ஆனால் ஊர் மக்கள் அவருடன் மோதுவதற்குப் பயப்படுகின்றனர். போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு நாம் பயப்பட வேண்டுமா?

அனைத்து கிராம சேவகர் பிரிவிலும் இந்த விடயத்தை ஆராய்வோம். நாடுமுழுவதும் ஒரு பாதுகாப்பு அரணாக ஒன்றாக பிணைந்து இந்த அச்சுறுத்தலை ஒழிப்பதற்காக திடஉறுதிக்கு வருவோமானால் இதனைத் தோற்கடிக்கலாம். போதைக்கு அடிமையானவர்களை மீட்டெடுக்க வேண்டும் என்றார்.

மேலும் 2025 பல துறைகளில் வெற்றிகளை அடைந்த வருடமாகும். இந்த வருடம் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்க இருக்கிறோம். அரச துறைக்கு 75 ஆயிரம் பேரை இணைக்கவும் பொலிஸிற்கு 10 ஆயிரம் பேரை இணைக்கவும் இருக்கிறோம்.

தமிழ்மொழியில் பேசும் பொலிஸார் எமக்குத் தேவை. பொலிஸிற்குச் சென்று தமது மொழியில் முறையிடக் கூடியதாக இருக்க வேண்டும். இராணுவத்திற்கும் ஆட்சேர்க்க இருக்கிறோம். அவற்றுக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்புமாறு யாழ்ப்பாண பெற்றோர்களை கோருகிறோம். சகல மொழிகளிலும் பேசும் பொலிஸ் மற்றும் சகல மொழிகளிலும் செயலாற்றும் இராணுவமும் அவசியம் என்றார். (ம-7)

## நாணயமாற்று விகிதம்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதங்களின்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 305.67 ஆகவும் விற்பனைப் பெறுமதி 313.21 ஆகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 407.92 சதம் ஆகவும் விற்பனைப் பெறுமதி 420.63 ஆகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 353.66 ஆகவும் விற்பனைப் பெறுமதி 365.08 ஆகவும் பதிவாகியுள்ளது. (ம-7)


# வேலணை பிரதேச சபை
## 2026ஆம் ஆண்டுக்கான ஏல அறிவித்தல்

வேலணை பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட மீன், மரக்கறிச் சந்தைகள், இறைச்சிக் கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், கடைகள் என்பவற்றை 01.02.2026 தொடக்கம் 31.12.2026 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலம் சபையால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 19.01.2026 (திங்கட்கிழமை) முதல் 29.01.2026 (வியாழக்கிழமை) வரை (மு.ப - 9.00 மணி முதல் - பி.ப 3.00மணி வரை)

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி
:- 30.01.2026 (வெள்ளிக்கிழமை) பி.ப 02.00 மணி வரை

கேள்வி திறக்கும் திகதி :- 30.01.2026 (வெள்ளிக்கிழமை) பி.ப 02.00 மணி

| தொ இல | சந்தைகளின் பெயர் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் | மாதாந்த வாடகை | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | வேலணை செட்டிபுலம் மீன் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 35,029.50 |
| 2 | நயினாதீவு மீன் மரக்கறிச் சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 31,432.50 |
| 3 | மண்டைதீவு வாராந்த சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 10,587.50 |
| | வேலணை துறையூர் மீன் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 4 | வேலணை துறையூர் மீன் சந்தை | 2,000.00 | ………… | 5,000.00 | 201,667.00 |
| 5 | கடை இல - 01 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 32,083.50 |
| 6 | கடை இல - 02 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 32,267.00 |
| 07 | கடை இல - 04 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 33,137.50 |
| 08 | கடை இல - 05 | 2,000.00 | 2,400.00 | 5,000.00 | 35,292.00 |
| 09 | கடை இல - 06 | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 32,083.50 |
| 10 | கடை இல - 07 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,800.00 | 5,000.00 | 34,467.00 |
| | வேலணை பொதுச்சந்தையும் (6ம் வட்டாரம்) சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 11 | கடை இல - 01 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 32,083.50 |
| 12 | கடை இல - 02 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 32,083.50 |
| 13 | கடை இல - 03 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 141,661.00 |
| 14 | கடை இல - 04 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 2,500.00 | 5,000.00 | 18,205.00 |
| | புங்குடுதீவு முற்றவெளிச் சந்தையும் சந்தையில் அமைந்துள்ள கடைகளும் | | | | |
| 15 | புங்குடுதீவு முற்றவெளி மீன் மரக்கறிச்சந்தை | 2,000.00 | ---------- | 5,000.00 | 116,967.00 |
| 16 | கடை இல - 05 சிற்றுண்டிச்சாலை | 2,000.00 | 850.00 | 5,000.00 | 47,392.00 |
| 17 | கடை இல - 08 | 2,000.00 | 1,500.00 | 5,000.00 | 37,583.50 |
| 18 | கடை இல - 09 ஆட்டிறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 37,583.50 |
| 19 | கடை இல - 10 கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 1,000.00 | 5,000.00 | 140,662.50 |

### நிபந்தனைகள்

1) கேள்வி பத்திரம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கான தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளித்தல் வேண்டும்.

2) உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுனராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்பட மாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.

3) கேள்வி ஆவணத்தை பெற்றுக்கொள்ளும் போது மேலுள்ள அட்டவணைக்கு அமைவாக கேள்வி வைப்புப் பணம், படிவக் கட்டணம் என்பவற்றை செலுத்துதல் வேண்டும்.

4) கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு ஒரு பிரதியினை **"தவிசாளர், வேலணை பிரதேச சபை, வங்களாவடிச் சந்தி, வேலணை"** எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிலோ இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு 30.01.2026ம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

5) தெரிவு செய்யப்படும் சந்தைகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள், வாகனத் தரிப்பிடமும் மலசலகூடமும் உள்ளடங்கலான சுற்றுலாமையம் (படகு சேவை தவிர்த்து) போன்றவற்றின் சித்திரை கேள்விதாரர்கள் மற்றும் தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடையின் சித்திரை கேள்விதாரர் ஆகியோர் சித்திரை தொகையின் **1/3** பகுதியினை சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்

6) கடைகளுக்கு சபையினால் விதிக்கப்படும் இயைபுடைய மாத வாடகையினை கேள்வித் தொகையுடன் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.

7) சந்தையைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் **4%** இற்கு மேல் வரியாக அறவிடக்கூடாது.

8) வாகனத்தரிப்பிடம், மற்றும் பொது மலசலகூடத்தினைக் குத்தகைக்கு எடுப்பவர்கள் சபையினால் விதிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக அறவீடுகள் எதனையும் மேற்கொள்ளக்கூடாது.

9) சந்தையை குத்தகைக்கு எடுப்பவரினால் சந்தையில் மேற்கொள்ளப்படும் அறவீடுகளுக்கு பற்றுச்சீட்டு வழங்கப்படுதல் வேண்டும்.

10) பொதுச்சந்தைகளில் இருந்து 500 மீற்றர் சுற்றளவுள்ள எல்லைக்குள் மரக்கறி, பழங்கள், தேங்காய், கோழி இறைச்சி போன்ற பொருட்கள் விற்பனை செய்ய முடியாது.

11) கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.

12) கேள்வித் தொகையிலும் குறைந்த கேள்வி விண்ணப்பம் கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்வி வைப்புப் பணமும் மீளளிக்கப்பட மாட்டாது.

13) உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாத கேள்விகள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

14) கேள்விகளை தகுந்த காரணங்களுடன் ஏற்றுக்கொள்வதற்கும் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நிராகரிப்பதற்குமான முழு அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.

- மேலதிக விபரங்களை வேலணை பிரதேச சபையின் தலைமை அலுவலகம் மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும்.
- குறிப்பிட்ட விடயங்களுக்கு மேலதிகமாக ஒப்பந்த ஆவணத்தில் குறிப்பிடப்படும் விடயங்களுக்கு உடன்பட வேண்டும் என்பதுடன் விதந்துரைக்கப்படாத விடயங்கள் தொடர்பில் சபையின் தீர்மானங்களுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

திரு.சி.அசோக்குமார்
தவிசாளர்,
வேலணை பிரதேச சபை.

(C-4826)

திகதி :- 17.01.2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியியல் நடபடிமுறைக்கோவையின் பிரிவு 16 இன் கீழான அறிவித்தல்

# மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

வழ.இல : நம்பிக்கைச்சொத்து/ 54/2025

**1917ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நம்பிக்கைச் சொத்துக்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 112 இன் கீழான விண்ணப்பம் தொடர்பாக**

**1. போஜன் உல்லாசன்**
தலைவர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**2. கணேசலிங்கம் சிவரூபன்**
உபதலைவர்
ஆலய நிர்வாக சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**3. அப்புத்துரை ரூபராசா**
செயலாளர்
ஆலய நிர்வாக சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**4. வரதராஜன் பிரதீபன்**
உப செயலாளர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**5. நாகரத்தினம் ஜெயகாந்தன்**
பொருளாளர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**6. கணேசலிங்கம் பரமசிவம்**
உறுப்பினர்,
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**7. துரைராசா உதயராஜன்**
உறுப்பினர்,
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**8. கந்தப்பிள்ளை கந்தசாமி**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**9. பாலசுப்பிரமணியம் ஜெயசுந்தரராசா**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**10. சிவகாந்தன் தவநிதியம்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**11. வரதராணி இராஜகம்பீரம்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**12. துரைரத்தினம் சுஜந்தன்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**13. வரதராஜன் குருசாந்தன்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**14. சாரதாதேவி கணேசலிங்கம்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன நிர்வாக சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**15. மகேஸ்வரி சபாபதி**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**16. கந்தையா குமாரதாஸ்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**17. துரைராசா விக்னராஜன்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**18. பாலசிங்கம் ஜெயசிங்கம்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**19. செல்லத்துரை விஜயரட்ணம்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

**20. கிருஷ்ணபகவான் வைஸ்ணவன்**
உறுப்பினர்
ஆலய பரிபாலன சபை
சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம்

மனுதாரர்கள்

மேற்படி விடயம் தொடர்பில்,

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர்கள், தெல்லிப்பளை கொல்லங்கலட்டியில் எழுந்தருளியிருக்கும் சடச்சப்பை ஞானவைரவர் தேவஸ்தானம் சார்பில், 1917 ஆம் ஆண்டின் 09 இலக்க நம்பிக்கைச் சொத்துக்கள் கட்டளைச்சட்டத்தின் பிரிவு 112 இன் கீழான விண்ணப்பம் தொடர்பாக மனு, சத்தியக்கூற்று மற்றும் ம1 தொடக்கம் ம6 வரையான ஆவணங்கள் என்பன அனைத்து மனுவின் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனமானது மனுதாரர்களை சென்றடைந்துள்ளது எனப் பிரகடனப்படுத்தும் சென்றடைதல் கட்டளையையும் தீர்வையையும் ( Vesting Order) கோரி நம்பிக்கைச் சொத்து / 54/ 2025 எனும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ் வழக்கானது பொதுநலனுடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இவ் வழக்கில் அக்கறையுள்ளவர்கள் யாரேனும் மனுதாரர்கள் கோரிய சென்றடைதல் கட்டளை (Vesting Order) ஏன் வழங்கக்கூடாதென்பதற்கான நியாயமான காரணங்கள் ஏதுமிருப்பின் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரிலோ அல்லது சட்டத்தரணி ஊடாகவோ இம்மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு குடியியல் நடபடிமுறைச் சட்டக்கோவையின் பிரிவு 16 இன் கீழ் அறிவித்தல் தரப்படுகின்றது.

**அட்டவணை**

வட மாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளைக் கோவிற்பற்று மாவிட்டபுரம் இறை **"சடச்சப்பை" நிலப்பரப்பு நான்கு குளி ஒன்பது தசம் எட்டு நான்கு (நில.பர.4 குளி 09.84).** இது 06.10.2025 திகதியிட்டு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ்.சதானந்தன் அவர்களால் அளந்து வரையப்பட்ட 1389 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனச் சுட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லை **கிழக்கு** :தவச்செல்வம் பெண் இராசம்மாவினதும் சிவானந்தம் பெண் இராஜேஸ்வரியின் ஆதனங்கள்: **வடக்கு:** மடத்தடி சடச்சப்பை வீதி **மேற்கு:** சின்னத்தம்பி சபாபதியின் ஆதனம், **தெற்கு** :சின்னத்தம்பி செல்லமுத்துவின் ஆதனம். இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்.

(இவ்வாதனம் வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள கிராம அலுவலர் பிரிவு வித்தகபுரம்- J/223 இலும் வலிகாமம் வடக்கு பிரேதச சபையின் எல்லைக்குள்ளும் அமைந்துள்ளது.)

மன்றின் கட்டளைப்படி

2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி

**வரைபு**
**(ஒப்பமிடப்பட்டுள்ளது)**
**அம்பிகா ஸ்ரீதரன்**
**மனுதாரர்களின் பதிவுபெற்ற சட்டத்தரணி**

**(ஒப்பமிடப்பட்டுள்ளது)**
**பதிவாளர்,**
**மாவட்ட நீதிமன்றம், மல்லாகம்.**
**(றபர் முத்திரையிடப்பட்டுள்ளது)**

(6580)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்
## புதிய அனுமதிகள்

**பண்பாட்டியலில் முதுமாணி (Master of Cultural Studies) - (அணி VI)**

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (www.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.


விண்ணப்ப முடிவுத்திகதி : 17/02/2026

மேலதிக தொடர்புகளுக்கு : 021222 3608

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் .**

(C-4824)


## கண்ணீர் அஞ்சலி



மலர்வு 10.02.1942 உதிர்வு 15.01.2026

எமது பாடசாலை ஆசிரியை
**திருமதி.கி.கொ.மரியடொறற்ரி**
அவர்களின் அன்புத் தந்தை

அமரர்.,
## அருளப்பு பிரான்சிஸ்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக்கழகம்,**
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்.**

(C-6579)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடுகளில் மறைந்திருக்கும்

# 95 குற்றவாளிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை



(கொழும்பு)

**வெளிநாடுகளில் தலைமறைவாக உள்ள 95 ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு எதிராக சிவப்பு அறிவித்தல் பெறப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எஃப்.யு. வுட்லர் தெரிவித்தார்.**

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

2024 ஆம் ஆண்டில் சிவப்பு எச்சரிக்கை மூலம் 10 சந்தேக நபர்களும், 2025 ஆம் ஆண்டில் 11 சந்தேக நபர்களும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் நாடு கடத்தல் சட்டத்தின் கீழ் 21 சந்தேக நபர்களை இலங்கைக்கு கொண்டு வர முடிந்துள்ளது.

வெளிநாடுகளில் இருந்து குற்றச் செயல்களை முன்னெடுத்து வரும் குற்றவாளிகள் பலரை நாம் அடையாளம் கண்டுள்ளோம்.

அதன் ஒரு கட்டமாகவே இன்று ஐக்கிய அரபு இராச்சியம், அபுதாபி சர்வதேச பொலிஸ், டுபாய் பொலிஸ் மற்றும் தூதரகங்களின் உதவியுடன் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

கைதானவர்கள் பல கொலைச் சம்பங்களுடன் மற்றும் நிதி மோசடியுடன் தொடர்புடையவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (நி)

## கட்டுப்பாட்டு விலையை மீறி அரிசி விற்பனை

# அபராதம் விதித்த நீதிமன்றம்

(கொழும்பு)

கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த ஜா-எல மற்றும் கந்தானை பகுதிகளைச் சேர்ந்த மூன்று வர்த்தகர்களுக்கு வெலிசறை நீதவான் நீதிமன்றம் தலா ஒரு இலட்சம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

நுகர்வோர் விவகார அதிகார சபையினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் வர்த்தகர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து இந்த மூன்று இலட்சம் ரூபாய் அபராத உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறித்த வர்த்தகர்கள் ஒரு கிலோ அரிசியை 308, 275 மற்றும் 280 ரூபாய் ஆகிய விலைகளில் விற்பனை செய்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசாங்கம் நிர்ணயித்த கட்டுப்பாட்டு விலையை மீறி நுகர்வோரை ஏமாற்றும் வகையில் செயற்பட்டமைக்காக இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட இந்த அபராதத் தொகையினை வர்த்தகர்கள் மூவரும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## கல்வி அமைச்சுக்கு முன்பாக

# மீண்டும் போராட்டம்

(கொழும்பு)

6ஆம் வகுப்பு மாணவர்களின் பெற்றோர்கள் கல்வி அமைச்சின் முன் போராட்டமொன்றை நடத்தினர்.

2026ஆம் ஆண்டுக்கான 6ஆம் வகுப்பு பாடத்திட்டம் தொடர்பில் முன்மொழியப்பட்ட கல்வி சீர்திருத்தங்களை செயற்படுத்தக் கோரியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள் மட்டுமன்றி மாணவர்களும் குறித்த போராட்டத்தில் பங்கேற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆங்கில பாடத்திட்டத்தைத் தவிர்த்து, ஏனைய பாடங்களுடன் தொடர்புடைய தொகுதிகளை மாணவர்களுக்கு கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

## டுபாயில் கைது செய்யப்பட்ட

# பாதாள உலகக்குழு உறுப்பினர்கள் நாட்டிற்கு அழைத்துவரப்பட்டனர்

(கொழும்பு)

அண்மையில் டுபாயில் வைத்து கைது செய்யப்பட்ட, பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய பாதாள உலகக் குழுவின் முக்கிய உறுப்பினர்கள் இருவர் நேற்று அதிகாலை நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

அவர்களுடன் சேர்த்து கைது செய்யப்பட்ட பெண் ஒருவரும் நாட்டிற்கு அழைத்து வரப்பட்டுள்ளார்.

கல்கிசை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரே இவ்வாறு அழைத்துவரப்பட்டுள்ளதாவும் அவர் அரச பணத்தை மோசடி செய்தமை தொடர்பாக தேடப்பட்டு வந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றச்செயல்களில் ஈடுபட்டு வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றவர்களைக் கைது செய்யும் விசேட நடவடிக்கையின் கீழ் இவர்கள் டுபாயில் வைத்து அந்நாட்டு பாதுகாப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பித்தக்கது. (நி)

# 500 மில்லியன் ரூபா கல்வி நிதி முறைகேடு;

## கையூட்டல் ஊழல் ஆணைக்குழுவில் எதிர்க்கட்சி முறைப்பாடு

(கொழும்பு)

கல்விச் சீர்திருத்தங்களுக்காக ஒதுக்கப்பட்ட 500 மில்லியன் ரூபாய் நிதி வீணடிக்கப்பட்டுள்ளதாகக் கூறி, ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தலைமையிலான குழுவினர் கையூட்டல், ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கையூட்டல், ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்த பின்னர் ஊடகங்களிடம் பேசிய முஜிபுர் ரஹ்மான்,

"கையூட்டல், ஊழல் ஆணைக்குழுவில் கையூட்டல் தொடர்பான புகார்களை மட்டும் தான் செய்ய வேண்டும் என்பதில்லை; நிதி முறைகேடு மற்றும் நிதி வீணடிப்பு தொடர்பாகவும் புகார் அளிக்க முடியும். அதன் அடிப்படையிலேயே 500 மில்லியன் ரூபா நிதி வீணடிக்கப்பட்டது குறித்து முறைப்பாடு செய்துள்ளோம்" என்று தெரிவித்தார்.

கல்வி அமைச்சிற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில், இந்த நிதி வீணடிப்புக்கு பிரதமர் ஹரிணி அமரசூரியவே பொறுப்பேற்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.



கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதில் அரசாங்கம் நியாயமான நடைமுறையைப் பின்பற்றவில்லை என எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.

கல்விச் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்தும் போது ஒரு "வெள்ளை அறிக்கை" சமர்ப்பிக்கப்பட்டு, அது குறித்து சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் விரிவான கலந்துரையாடல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டினார். (நி)

## அனைத்து இடங்களிலும்

# இனி ஒன்லைனில் சாரதி உரிமங்கள்

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு முன்னர் 25 மாவட்டங்களிலும் சாரதி உரிமங்களை ஒன்லைனில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையர் நாயகம் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த சேவை தற்போது 11 மாவட்டங்களில் ஒன்லைனில் செயற்பட்டு வருகிறது.

மீதமுள்ள மாவட்டங்களில் சாரதி உரிமங்களை ஒன்லைனில் வழங்குவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து மாவட்டங்களிலும் சாரதி உரிமங்களை ஒன்லைனில் வழங்குவதன் மூலம், ஒரு மாதத்திற்குள் சாரதி உரிமங்களைப் பெற முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டு, சாரதி உரிமங்களை அச்சிடுவதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு 184 மில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டது.


இந்தாண்டு 28 மில்லியன் ரூபாய் செலவில் புதிய நிறுவனம் மூலம் சேவையைப் பெறவும், மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மூலம் அச்சிடும் இயந்திரங்களை வாங்கவும், நடவடிக்கை எடுக்கப்படும் என மோட்டார் போக்குவரத்து ஆணையர் தெரிவித்துள்ளார். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நயினைச் சித்தர்
தவத்திரு முத்துக்குமார சுவாமிகள்
குருபூசை தினம் 17.01.2026 இன்று சனிக்கிழமை.

**தை மாத பூராட நட்சத்திரம்**



**குரு நாதர் சரணம்**

ஈழத்து சித்தர் எங்கள் நயினை முத்து
சுவாமி முத்துக்குமாரர் எங்கள் சொத்து

திருவண்ணாமலையில் ஜொலித்த முத்து
ரமண மகரிசியின் திருவருள் பெற்ற முத்து
மணிபல்லவ தீவு வந்த எங்கள் குரு
நாகம்மை தாய் பெற்ற ஞான முத்து

சிவலிங்கப் புளியடியில் ஜோதி ஆனாய்
காட்டு கந்தனிடத்தில் சமாதி ஆனாய்
நாளும் நாம் தொழும் கடவுளானாய்
பாடிப் பணிந்திடவே வாழ்வு தந்தாய்

ஞானம் தருவாய் என்றும் அருள் தருவாய்
சோமஸ் கந்த ஈஸ்வரத்தில் உடனுறைந்தாய்
அருள் ஒளி நிலையத்தில் அமுது தந்து - எமை
காலம் எல்லாம் காத்திடுவாய் - எங்கள் குருநாதா !

வ.குலத்துங்கன்

# கஸ்ஸப தேரரை சந்திக்க சிறைச்சாலை சென்ற விமல்

(திருமலை)

திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பலாங்கொட கஸ்ஸப தேரரை, பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச உள்ளிட்ட குழுவினர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

திருகோணமலை கடற்கரையில் புத்தர் சிலை வைத்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கஸ்ஸப தேரரின் நலம் விசாரிப்பதற்காக இந்த விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தச் சந்திப்பில் விமல் வீரவன்ச, அரிசிமலை விகாரையின் விகாராதிபதி பானாமூரே திலகவங்ச நாயக்க தேரர், சீலரத்ன தேரர் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி)

# ஜூலி சங் வெளியேற்றத்தை கொண்டாடிய கம்மன்பில



(கொழும்பு)

தனது பதவிக் காலத்தை நிறைவு செய்வதற்காக அமெரிக்கா செல்லத் தயாராகி வரும் இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங்கின் வெளியேற்றத்தை முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில பாற்சோறு சாப்பிட்டு கொண்டாடியுள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஜூலி சங் இலங்கைக்கு 4 ஆண்டுகளாக ஒரு சாபக்கேடாக இருந்ததாகவும், அவரது விலகலைக் கொண்டாட நாடு முழுவதும் பட்டாசுகள் வெடித்து, தம்புருகள் இசைக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# 13 நாட்களில் 106.6 பில்லியன் வசூல் பதிவு செய்தது சுங்கத்துறை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டின் தொடக்க வாரங்களில் இலங்கை சுங்கத்துறை வலுவான வருவாய் செயற்திறனைப் பதிவு செய்துள்ளது.

ஜனவரி மாதத்தின் முதல் 13 நாட்களில் 106.6 பில்லியன் ரூபாய்களை வசூலித்துள்ளது.

இது மாத இலக்கான 160.2 பில்லியன் ரூபாயில் 66 சதவீதத்திற்கும் அதிகமாகும் என்று அதிகாரபூர்வ தரவுகள் தெரிவிக்கின்றன.

டித்வா சூறாவளியால் ஏற்பட்ட இடையூறுகளைத் தொடர்ந்து, நவம்பரில் குறைந்தது நான்கு நாட்களுக்கு செயற்பாடுகளை நிறுத்தியது.

மேலும் டிசம்பரில் அதிக இறக்குமதி அளவுகளுக்கு மத்தியிலும், கடந்த மாதம் முதல் கொள்கலன் அனுமதியை துறை துரிதப் படுத்தியுள்ளது.

2025 ஆம் ஆண்டில், இலங்கை சுங்கம் 2,551 பில்லியன் ரூபாய் வருவாயை சாதனையாக எட்டியது.

இது திருத்தப்பட்ட ஆண்டு இலக்கான 2,241 பில்லியன் ரூபாயைத் தாண்டி, முந்தைய ஆண்டின் வருவாயான 1,553 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடும்போது 64.2 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.

2026 ஆம் ஆண்டிற்கு, சுங்கத்துறை 2,207 பில்லியன் ரூபாய் வருவாய் இலக்கை நிர்ணயித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 13.5 சதவீதம் குறைவு, ஏனெனில் அதிகாரிகள் கார் இறக்குமதியில் குறிப்பிடத்தக்க சரிவை எதிர்பார்க்கிறார்கள். (நி)

# உலக அமைதிக்கான 3 ஆவது ஞாயிறு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் உலக அமைதிக்கான 3 ஆவது ஞாயிறு நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிறவுண் வீதியில் அமைந்துள்ள பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையத்தில் இடம் பெறவுள்ளது. (8)




கனிஸ்ரா





நிசாந்தினி




கஜவர்ஷன்




குமார்




தேவி




யதுர்ஷா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அவனியாபுரம் ஜல்லிக்கட்டு ஆரம்

# 22 காளைகளை அடக

## சாதனை படைத்த இளைஞ



(மதுரை)

தமிழர் திருநாளாப்
திருநாள் பண்டிகையை ஒட்டி
அவனியாபுரத்தில் நடைபெற்ற
கட்டு போட்டியில் 22 காளை
அடக்கி வலையங்குளம் பால
சாதனை படைத்துள்ளார்.

தமிழர்களின் வீரத்தை பறைசாற்றும் மாடுகளை அடக்கும் ஜல்லிக்கட்டு போட்டிகள் பொங்கல் பண்டிகையைத் தொடர்ந்து நடத்தப்படும்.

இதில் அவனியாபுரம், அலங்காநல்லூர், பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டிகள் உலக பிரசித்தி பெற்றது.

இவற்றில் பொங்கல் தினமான நேற்று முன் தினம் அவனியாபுரத்தில் ஜல்லிக்கட்டு நடைபெற்றது.

இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட காளைகள் மற்றும் காளைகளை அடக்கும் வீரர்கள் கலந்து கொண்டனர்.

இதில் 22 காளைகளை அடக்கி மதுரை வலையங்குளத்தை சேர்ந்த பாலமுருகன் முதலிடம் பிடித்தார். அவனியாபுரம் கார்த்தி 17 காளைகளை அடக்கி 2ஆவது இடமும், அவனியாபுரம் ரஞ்சித் 16 காளைகளை அடக்கி 3 ஆவது இடமும் பிடித்தனர்.

முதலிடம் பிடித்த பால முருகனுக்கு பரிசாக உந்துருளி வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 2ஆவது இடம் பிடித்த கார்த்திக்கிற்கு இரு சக்கர வாகனம் பரிசாக அளிக்கப்பட்டது.

ஜல்லிக்கட்டில் பங்கேற்க 3,090 காளைகளும், 1,849 மாடுபிடி வீரர்களும் முன்பதிவு செய்திருந்தனர். காளைகள் மற்றும் மாடுபிடி வீரர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் நடத்தப்பட்டு, தகுதிவாய்ந்த காளைகளுக்கும், மாடுபிடி

# அமெரிக்க பிடியில் சிக்கியது

## வெனிசூலாவின் ஆறாவது எண்ணெய்க் கப்பல்





(வோஷிங்டன்)

வெனிசூலாவின் மசகு எண்ணெய் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்தும் அமெரிக்காவின் தீவிர முயற்சியின் ஒரு பகுதியாக, கரீபியன் கடலில் ஆறாவது எண்ணெய் கொள்கலன் கப்பலை அமெரிக்க இராணுவம் அதிரடியாகக் கைப்பற்றியுள்ளது.

"வெரோனிகா" எனப் பெயரிடப்பட்ட இந்தக் கப்பல், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள "தடை உத்தரவை" மீறிச் செயற்பட்டதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

அதிகாலை நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில், அமெரிக்க கடற்படையினர் மற்றும் வீரர்கள் எந்தவித மோதலுமின்றி கப்பலைத் தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.

"வெனிசூலாவிலிருந்து முறையாகவும், சட்டபூர்வமாகவும் ஒருங்கிணைக்கப்படும் எண்ணெய் மட்டுமே இனி வெளியேற அனுமதிக்கப்படும்" என்று அமெரிக்காவின் சதர்ன் கமாண்ட் சமூக வலைத்தளத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளது.

கயானா நாட்டின் கொடியுடன் பயணித்த வெரோனிகா கப்பல், முன்பு ரஷ்யாவில் பதிவு செய்யப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

இது போன்ற 1,000இற்கும் மேற்பட்ட "நிழல் கப்பல்கள்" தடை செய்யப்பட்ட எண்ணெய்யைக் கடத்துவதாக அமெரிக்கா கருதுகிறது.

இந்த மாதத் தொடக்கத்தில் வெனிசூலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ கைது செய்யப் பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டின் பரந்து விரிந்த எண்ணெய் வளங்களை அமெரிக்கா தனது கட்டுப்பாட்டில் எடுக்கத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே, 500 மில்லியன் டொலர் மதிப்பிலான வெனிசூலா எண்ணெய்யை அமெரிக்கா முதல் முறையாக விற்பனை செய்து முடித்துள்ளது. (3)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ரம்பம்

டக்கி

ளஞன்

...நாளாம் தைத்
...ப ஒட்டி மதுரை
...டைபெற்ற ஜல்லிக்
...2 காளைகளை
...ம் பாலமுருகன்
...ார்.

...ளைகளும், ...வீரர்களும் ...திருந்தனர். ... மற்றும் ...களுக்கான ... பரிசோ...டத்தப்பட்டு, ...த காளைக ... மாடுபிடி வீரர்களுக்கும் அனுமதி யளிக்கப்பட்டது.

12 சுற்றுகளின் முடிவில், 937 காளைகள் களம் கண்டன. இதன் முடிவில் பாலமுருகன் அதிக காளைகளை அடக்கி வெற்றி பெற்றார். (3)

## மருத்துவ அவசரம் காரணமாக பூமிக்கு திரும்பிய விண்வெளி வீரர்கள்

(லண்டன்)

சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து மருத்துவ காரணங்களுக்காக வெளியேற உத்தரவிடப்பட்ட விண்வெளி வீரர்கள் நால்வரும் பத்திரமாக தரை இறங்கினர்.

கடந்த 1998 முதல் பூமியை சுற்றிவரும் சர்வதேச விண்வெளி நிலையத்தில் உலக நாடுகளை சேர்ந்த விண்வெளி வீரர்கள் ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

அவ்வப்போது நிலையத்தில் இருக்கும் வீரர்களுக்கு பதிலாக மாற்று வீரர்கள் அனுப்பி வைக்கப்படுவர். அப்படி இறுதியாக சென்ற நாசா வீரர் ஜெனா கார்ட்மேன், மைக் பிங்கி, ஜப்பான் நாட்டை சேர்ந்த கிமியா யூ, ரஷ்யாவை சேர்ந்த ஒலக் பிளாட்னாவ் ஆகியோர் 167 நாட்கள் விண்வெளி நிலையத்தில் தங்கி இருந்தனர்.

அவர்களது விண்வெளி நிலைய ஆய்வுக் காலம் முடிய இன்னும் ஒரு மாத காலம் உள்ளது. எனினும், மருத்துவ அவசர காரணம் என்று கூறி, அவர்கள் நால்வரையும் உடனடியாக பூமிக்கு திரும்ப நாசா உத்தரவிட்டது. அதன்படி விண்கலத்தில் புறப்பட்ட வீரர்கள் நால்வரும் நேற்று கலிபோர்னியாவில் தரை இறங்கினர்.

சர்வதேச விண்வெளி நிலையத்தின் 26 ஆண்டு கால வரலாற்றில், மருத்துவ அவசரம் என்று கூறி, வீரர்கள் வெளியேற உத்தரவிடப்பட்டது இதுவே முதல் முறை. வீரர்களில் ஒருவருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டதாக தகவல் வெளியிடப்பட்டது. எனினும், அது என்ன விதமான பாதிப்பு, யாருக்கு ஏற்பட்டது என்பது பற்றி நாசா அதிகாரபூர்வமாக எந்த அறிவிப்பும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (3)



## அமைதிக்கான நோபல் பரிசை ட்ரம்பிடம் கையளித்த மச்சாடோ



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அமைதிக்கான நோபல் பரிசுக்கு ஆசைப்பட்டு, நான் எட்டு போர்களை நிறுத்திவிட்டேன் என்று பலமுறை கூறி வந்தாலும், 2025ஆம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு அவருக்கு வழங்கப்படவில்லை.

வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோவுக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

இதனிடையே, வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ அமெரிக்கப் படையினரால் சிறைபிடிக்கப்பட்டத்தைத் தொடர்ந்து அந்நாட்டின் முக்கிய எதிர்க்கட்சி தலைவரும் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவருமான மரியா கொரினா மச்சாடோ, "எனக்கு கிடைத்த நோபல் பரிசை ட்ரம்புடன் பகிர்ந்து கொள்வதாக தெரிவித்தார்.

மச்சாடோவின் இந்த கருத்துக்கு நோபல் கமிட்டி எதிர்ப்புத் தெரிவித்தது.

நோபல் பரிசு ஒருவருக்கு வழங்கப்பட்டால், வாழ்நாள் முழுவதும் அது அவருடையதுதான் என நோபல் அமைப்பு திட்டவட்டமாக கூறியிருந்தது.


இதற்கிடையே, வெனிசுலா எதிர்க்கட்சித் தலைவர் மரியா கொரினா மச்சாடோ வெள்ளை மாளிகையில் ட்ரம்பை சந்தித்தார்.

அப்போது அவருக்கு வழங்கப்பட்டு இருந்த அமைதிக்கான நோபல் பரிசை ட்ரம்பிடம் வழங்கினார். இதுதொடர்பாக செய்தியாளர்களிடம் மரியா கொரினா மச்சாடோ கூறுகையில், ட்ரம்பிற்கு தனது பரிசை வழங்கியதாக தெரிவித்தார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "வெனிசுலாவைச் சேர்ந்த மரியா கொரினா மச்சாடோவைச் சந்தித்தது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய கௌரவம்.

அவர் பலவற்றைக் கடந்து வந்த ஒரு அற்புதமான பெண்மணி. நான் செய்த பணிக்காக மரியா தனது அமைதிக்கான நோபல் பரிசை எனக்கு வழங்கினார்.

பரஸ்பர மரியாதையின் அற்புதமான செயல். நன்றி மரியா!" என்று பதிவிட்டுள்ளார். (3)



## மருத்துவக் கவனக்குறைவால் துண்டிக்கப்பட்ட பச்சிளம் சிசுவின் விரல்

(பீஜிங்)


சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் உள்ள வைத்தியசாலை ஒன்றில், பிரசவத்தின் போது மகப்பேறின்போது உதவும் குடும்ப நல உத்தியோகத்தரின் கவனக்குறைவால் பச்சிளம் குழந்தையின் விரல் துண்டிக்கப்பட்ட கொடூரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

குறித்த குழந்தை சிசேரியன் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பிறந்திருந்தது.

குழந்தையின் தொப்புள் கொடியை கத்தரிக்கோலால் வெட்டியபோது, தவறுதலாக குழந்தையின் இடது கை விரலையும் வெட்டியுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குழந்தை பிறந்து இரண்டு மணி நேரத்தின் பின்னரே, குழந்தையின் விரல் துண்டிக்கப்பட்ட விடயத்தை மருத்துவமனை நிர்வாகம் தந்தையிடம் தெரிவித்துள்ளது.

தொப்புள்கொடியை வெட்டும்போது குழந்தை திடீரென கையை அசைத்ததால்



இந்தத் தவறு நேர்ந்துவிட்டதாக மருத்து வமனை தரப்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

துண்டிக்கப்பட்ட விரலை மீண்டும் இணைப்பதற்காக, குறித்த குழந்தை சுமார் 300 மைல் தொலைவிலுள்ள வேறொரு விசேட மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது.

இந்தச் சம்பவத்திற்காகப் பெற்றோரிடம் மன்னிப்புக் கோரியுள்ள மருத்துவமனை நிர்வாகம், இழப்பீடு வழங்கவும் சம்மதித்துள்ளது.

அதேவேளை, கவனக்குறைவாகச் செயற்பட்ட மருத்துவ உதவி பெண்ணின் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கொரிய முன்னாள் ஜனாதிபதிக்கு 5 ஆண்டுகள் சிறை

(சியோல்)

தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோலுக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சியோல் மத்திய மாவட்ட நீதிமன்றம் நேற்று இந்தத் தீர்ப்பை அறிவித்துள்ளது.

இராணுவ சட்ட அமுலாக்கம் மற்றும் கிளர்ச்சி ஆகிய விவகாரங்களில், தென்கொரியாவின் முன்னாள் ஜனாதிபதி யூன் சுக் இயோல் குற்றவாளி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கடந்த 2024, டிசம்பர் 3ஆம் திகதி நள்ளிரவில், ஜனாதிபதி யூன் சுக் இயோல் திடீரென இராணுவச் சட் டத்தை நடைமுறைப்படுத்தி பாராளுமன்றை முடக்க முயன்றார்.

இருப்பினும், எம்.பிக்கள் மற்றும் பொதுமக்களின் துணிச்சலான போராட்டத்தால் சில மணிநேரங்களிலேயே இந்த முயற்சி தோல்வியடைந்தது.



இதனைத் தொடர்ந்து அவர் பதவி நீக்கம் செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன், வழக்கும் தொடரப்பட்டிருந்தது.

வழக்கு விசாரணையின் பின்னர் நேற்று இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1991- இந்து
நட்சத்திரம்: மூலம்
9இல்சூரிசெவ்
கி-பா- 28
உயரம்: 6"
தகைமை/தொழில்: BSc, MSc, Engineer (Australia)
எதிர்பார்ப்பு: Engineer
தொ.இ: B/16435

பிறப்பு:1989- இந்து
நட்சத்திரம்:ஆயிலியம்
11இல்சூரிசெவ்
கி-பா-19
உயரம்:5'6"
தகைமை/தொழில்-A/L,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16436

பிறப்பு:1986-இந்து
நட்சத்திரம்:மூலம்
கி-பா-78
உயரம்:5'10"
தகைமை/தொழில்-BSc,MSc,Engineer
எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்
தொ.இ: B/16438

பிறப்பு: 1996- இந்து
நட்சத்திரம்:கேட்டை
2இல்செவ்
உயரம்:5'10"
தகைமை/தொழில்- BSc, MSc, Engineer (London)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16439

பிறப்பு: 1989-இந்து
நட்சத்திரம்:சுவாதி
8இல்செவ்
கி-பா-56
உயரம்:5'6"
தகைமை/தொழில்: O/L, பக்க வடிவமைப்பாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16440

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1992-இந்து
நட்சத்திரம்-மகம்
7இல்செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: Nurse (பிரான்ஸ்)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16459

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்-அத்தம்
கி-பா- 6
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc,MSc,Data Analyst
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/16466

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்-அச்சுவினி
2இல்செவ்
கி.பா -38
உயரம்-5'4"
தகைமை/தொழில்: BA, MA
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16468

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்:உத்தராடம்
கி.பா-13 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில் -HNDA, Accountant
எதிர்பார்ப்பு: அரச/தனியார் தொழில்
தொ.இ: G/16470

பிறப்பு-1996 - இந்து
நட்சத்திரம்-அனுசம்
கி.பா- 11 1/4
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc, Pharmacist
எதிர்பார்ப்பு - Degree & Employee
தொ.இ: G/16473

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 523

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



# நல்ல பெயர்

ஒரு நண்பர். தலையைப் பிய்த்துக் கொண்டு என்னிடம் வந்தார். இது, எனக்குக் கொஞ்சம் வித்தியாசமான அனுபவம். வழக்கமாக நம்மிடம் வருபவர்கள் திரும்பிப் போகும் போதுதான் தலையை பிய்த்துக் கொண்டு போவார்கள். இவர் வருகின்றபோதே இப்படி ஏன் வருகிறார் என்று யோசனை செய்தேன்.

"என்ன விடயம்?" என்றேன்.

பையன் பிறந்திருக்கிறான் என்றார் அவர்.

"மகன் பிறந்திருக்கானா? மகிழ்ச்சிக்குரிய செய்தியாச்சே. இதற்கு ஏன் இப்படி ஆகிவிட்டீர்கள்?" என்றேன்.

"அவனுக்கு ஒரு பெயர் வைக்க வேண்டும். நல்ல பெயராக அமைய வேண்டும். அதுதான் என்ன பெயர் சூட்டலாம் என்று யோசனை செய்து கொண்டே வருகிறேன்!" என்றார்.

உடனே அது சம்பந்தமா எனக்குத் தெரிஞ்ச சில செய்திகளை அவரிடம் சொன்னேன்.

மனோ தத்துவ நிபுணர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? குழந்தையைப் பெற்றவர்கள் பொதுவாக முதல் குழந்தைக்குப் பெயரைத் தேர்ந்தெடுக்கிறது எப்படி என்பதை அவங்க சொல்கிறார்கள்.

குழந்தையைப் பெற்றவர்கள் அதன் எதிர்காலம் எப்படி அமையணும் என்று ஆசைப்படுகிறார்களோ அல்லது யார் மாதிரி நம் குழந்தை ஆக வேண்டும் என்று விரும்புகிறார்களோ அப்படிப்பட்ட பெயரைத்தான் சூட்டுகிறார்களாம்.

தன்னை ரொம்பவும் வசீகரித்துள்ள மகான், தலைவர், விஞ்ஞானி, உறவுக்காரர், நண்பர், ஆசிரியர் பாட்டனார் இப்படி ஏதாவது ஒரு இலட்சியத்தோடுதான் முதல் குழந்தையின் பெயரை 75 சதவீதம் பேர் தேர்ந்தெடுக்கிறார்கள்.

நல்லா வாழ்ந்தவர்கள் அல்லது வாழ்பவர்கள் பெயரைக் குழந்தைக்கு சூட்டும் போது அந்தக் குழந்தைக்கு நாமும் அந்தப் பெயருக்குத் தகுந்த மாதிரி உயர வேண்டும் என்பதை உந்துசக்தி இயல்பாகவே வளருதாம். இதெல்லாம் நவீன ஆராய்ச்சி முடிவுகள்.

சிலபேர் வித்தியாசமாக இருக்க வேண்டும் என்பதற்காக குழந்தைகளுக்கு விநோதமான பெயர் எதையாவது வைத்துவிடுவது வழக்கம். மற்ற பிள்ளைகள் கேலி செய்கின்ற அளவுக்கு ஆகிவிடும். அதனாலே சண்டை போட வேண்டியிருக்கும். பின்னாடி முரட்டுத்தனம் வளர இதுவே காரணமாகிவிடும்

சமீபத்திலே ஒரு ஆராய்ச்சி நடந்ததாம். ஆராய்ச்சி செய்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் விபரீதமான பெயருடையவர்கள் மற்றவர்களை விட நான்கு மடங்கு அதிகமாக சட்டத்தை மீறியவர்களாக இருக்கிறார்கள். இன்னும் சில பேருக்கு ஒருவித தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு ஒதுங்கி வாழ ஆரம்பித்து விடுவார்களாம். எதற்கும் உபயோகமில்லாதவர்கள் ஆகிவிடுவார்களாம்.

அமெரிக்காவிலே சிகாகோவிலே ஒரு மனநோய் மருத்துவ ஆராய்ச்சி நடந்தது. அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் விசித்திரமான விபரீதமான அர்த்தம் தொனிக்கும் பெயருடையவர்கள்தாம் அதிக அளவில் மனநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக சொல்கிறார்கள். லண்டனிலே ஒரு டாக்டர் அவர் என்ன சொல்கிறார்.

"ஒருவருடைய பெயர் அவருடைய உடல் நலத்தையும் கூட பாதிக்க வல்லது" என்கிறார்.

இப்படியெல்லாம் கேள்விப்படும்போது நமக்கே நம்புவதற்குக் கஷ்டமாத்தான் இருக்கும். இருந்தாலும் மனஇயல் நிபுணர்கள் சொல்வதினாலே இதெல்லாம் சிந்திக்க வேண்டிய கருத்துக்கள்.

நல்ல தமிழ்ப் பெயரைப் பிள்ளைக்குச் சூட்டுங்கள் நான் ஒரு தமிழன் என்று அடையாளம் காட்டவே என்று பாடினார் கலைமாமணி கவிஞர்.நா.ம. முத்துக்கூத்தன் அவர்கள் .

தமிழ்ப்பண்பு வளரவே தமிழினில் பெயர் சூட்டுவோம் எனப் பாடுவார் "தமிழ்மாமணி" கவிஞர் சீனி. திருநாவுக்கரசு அவர்கள்.

அதனாலே பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டும்போதும் கவனம் தேவை. இந்தக்காலத்துப் பிள்ளைகள் எல்லாம் ரொம்ப முன்னேறியிருக்கிறது இந்த விடயத்திலே. அன்றைக்கு ஒரு சின்ன பையனைப் பார்த்துக் கேட்டேன்.

"என்னப்பா... பள்ளிக்கூடத்திலே சேர்ந்து விட்டியா?"என்று.

"சேர்ந்து விட்டேன்!"என்றான்.

"உங்க டீச்சர் பெயர் என்ன?" என்று கேட்டேன். "இன்னும் நாங்கள் வைக்கவில்லை!" என்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு சென்மேரிஸ் விளையாட்டு கழகத்திற்கு FAIRMED நிறுவனத்தினால் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியானவிளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன. (படம் : மகாலிங்கம்)

# அபிராமி பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அபிராமிபட்டர் விழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

அபிராமி அந்தாதி நூறு பாடல்களும் இசைக்கப்பட்டு பின் அம்பாளுடன் அபிராமி பட்டர் வீதி வலம் வரும் சிறப்பு வழிபாடும் இடம் பெறும். (8)

# சட்டவிரோத மணல் அகழ்வு

## டிப்பர், உழவு இயந்திரங்கள் பறிமுதல்




(தருமபுரம்)

கடந்த 24 மணி நேரத்தில் சட்ட விரோதமான மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஐந்து டிப்பர் வாகனங்கள் மற்றும் உழவு இயந்திரங்கள் என்பன கிளிநொச்சியில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பன்னங்கண்டி, முரசுமோட்டை, கண்டாவளை, பெரிய பரந்தன்ஆகிய பகுதிகளில் அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் குறித்த டிப்பர் வாகனங்கள் மற்றும் உழவு யந்திரங்கள் என்பன கிளிநொச்சி பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பறிமுதல் செய்யப்பட்ட தடயப் பொருட்களை கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8-316)





போராளிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் வங்கக் கடலில் காவியமான தளபதி கிட்டு உட்பட 10 வீரர்களின் 33 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நல்லூர் முத்திரைச் சந்தியில் அமைந்திருக்கும் கிட்டுப் பூங்காவில் நடைபெற்றது.

இந் நினைவேந்தல் நிகழ்வில் நல்லூர் தியாக தீபம் திலீபன் ஆவணக் காப்பகத்தினால் உருவாக்கப்பட்ட "கிட்டு ஒரு தனி மனித வரலாறு" என்னும் தொனிப் பொருளுடன் தளபதி கிட்டுவின் வாழ்வியல் தொடர்பான ஆவணக் காட்சியகமும் திறந்து வைக்கப்பட்டது.

(படங்கள்:- சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 400 | 400 | 250 | 220 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 200 | -- | -- |
| பச்சைமிளகாய் | 900 | 800 | 800 | 800 | 800 |
| தக்காளி | 600 | 700 | 600 | 550 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 150 | 300 | 90 |
| கோவா | 300 | 300 | 300 | 280 | 230 |
| கரட் | 480 | 600 | 600 | 400 | 440 |
| பூசணி | 150 | 150 | 200 | 180 | 90 |
| புடோல் | 300 | 200 | 400 | 300 | 220 |
| வாழைக்காய் | 140 | 150 | 200 | 150 | 150 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 400 | 200 | 350 |
| பெரிய வெங்காயம் | 160 | 200 | 200 | 160 | -- |
| பாகற்காய் | 700 | 400 | 1000 | 600 | 400 |
| வெண்டக்காய் | 350 | 250 | 400 | 300 | 250 |
| கருணைக் கிழங்கு | 260 | 250 | 300 | -- | 200 |
| பயற்றங்காய் | 900 | 400 | 700 | 800 | 350 |
| லீக்ஸ் | 450 | 500 | 600 | 400 | 440 |
| பீற்றூட் | 500 | 1000 | 600 | 550 | 700 |
| கறிமிளகாய் | 800 | 800 | 800 | 800 | 650 |
| முருங்கைக்காய் | -- | 1000 | -- | -- | -- |
| போஞ்சி | 550 | 400 | 800 | 450 | 400 |
| கத்தரிதம்புள்ள | 350 | 400 | 360 | -- | -- |
| கீரை - 1 பிடி | 80-160 | 150 | 120 | -- | 160 |
| தேசிக்காய் | 300 | 200 | 200 | 300 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 100-150 | -- | 120 |
| இராசவள்ளி | 700 | 500 | 500 | -- | 475 |
| வெங்காயப்பூ | 500 | 500 | 800 | -- | -- |
| முள்ளங்கி | 160 | 200 | 300 | 160 | 180 |
| பொன்னாங்காணி | 100 | 150 | 80 | -- | 50 |
| வல்லாரை | 70 | 100 | 100 | -- | 100 |
| ஈரப்பலா | 150 | 100 | 150 | -- | 90 |

# இராசிபலன்

17.01.2026
தை 03, சனிக்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 1.09 மணிவரை
மூலம் முற்பகல் 9.31 மணிவரை

சுபநேரம் 3.35-5.05மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**கடகம்** எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம்மாறுவர், உடல்நலன் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம்** பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம், உடல்நலனில் கவனம் தேவை, பக்குவமாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**ரிஷபம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றிமறையும்.

**சிம்மம்** பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்.

**விருச்சிகம்** குடும்ப மகிழ்ச்சி கூடும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கும்பம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மிதுனம்** பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** பேச்சில் கனிவு பிறக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, இரவுபகல் பாராது பாடுபடுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு.

**மீனம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு.

அமைதிக்காக உழைத்து அமைதியுடன் வாழ்பவர்களே பாக்கியசாலிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 957





பருந்துகளும் இராஜாளிகளும் அலறிக் கொண்டு தரையில் விழுந்தன. கரிகாலனுடைய கொலை வெறி நேரமாக ஆக அதிகமாகிக் கொண்டிருந்தது. அவனுடன் சென்றவர்களுக்கு அதிக வேலை இருக்கவில்லை. குதிரைகளும் மனிதர்களும் கூட்டமாக இரைச்சலிட்டுக் கொண்டு சென்றதில் காட்டு மிருகங்கள் தத்தம் இடத்திலிருந்து கிளம்பிச் சிதறி ஓடின. மற்றவர்கள் வேட்டையில் செய்த உதவி அவ்வளவேதான். கரிகாலன் மீது பாய வந்த மிருகங்கள் மீது மற்றவர்கள் அம்பு விடுவதையும் வேலை எறிவதையும் கூடக் கரிகாலன் அனுமதிக்கவில்லை. கந்தமாறன் ஒரு தடவை அவ்வாறு கரிகாலன் மீது பாய்ந்து வந்த கரடியின் பேரில் அம்பு எய்தான். அப்போது கரிகாலன் அவன் பக்கம் திரும்பிப் பார்த்து, "கந்தமாறா! நீ கரடியைக் கொல்லப் பார்த்தாயா? என்னைக் கொல்ல முயன்றாயா?" என்று கேட்டான். கந்தமாறன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. பிறகு அவன் வில்லை வளைக்கவே இல்லை.

ஏறக்குறைய சூரியன் உச்சி வானத்தை அடைந்த சமயத்தில் எல்லோரும் களைத்துப் போனார்கள். சற்று ஓய்வு எடுத்துக் கொண்டு வீடு திரும்பலாமே என்ற யோசனை எல்லோருடைய மனத்திலும் தோன்றியது. ஆனால் கரிகாலனோ களைத்துப் போன குதிரையை மேலும் காட்டு வழிகளில் செலுத்திக் கொண்டு போனான்.

காலை நேரத்திலெல்லாம் கந்தமாறன் கரிகாலனையொட்டிப் போய்க்கொண்டிருந்தான். "என்னைக் கொல்லப் பார்த்தாயா?" என்று கரிகாலன் அவனைக் கேட்ட பிறகு கந்தமாறன் பின்னால் தங்கிப் பார்த்திபேந்திரனுடன் சேர்ந்து கொண்டான். அவனிடம் இளவரசரின் முரட்டுத்தனமான நடத்தையையும் பேச்சையும் பற்றிக் குறை கூறத் தொடங்கினான். பார்த்திபேந்திரன் அதற்குச் சமாதானம் கூற முயன்றான்.

இந்தச் சமயம் பார்த்து வந்தியத்தேவன் கரிகாலனை அணுகினான். பிறகு அவர்கள் இருவருமே சேர்ந்து முன்னால் சென்று கொண்டிருந்தார்கள். வந்தியத்தேவன் வில்லும் அம்பும் எடுத்து வரவில்லை. அவனுக்கு வில்வித்தை அவ்வளவாகப் பழக்கமும் இல்லை. கையில் வேல் மட்டும்தான் கொண்டு வந்திருந்தான். ஆகையால் கரிகாலனுடைய வேட்டையில் குறுக்கிடாமல் அவன் ஜாக்கிரதையாகச் சென்று வந்தான். ஏதாவது அபாயம் நேருவதாக இருந்தால் வேலை உபயோகிப்பதற்கு மட்டும் எச்சமயமும் ஆயத்தமாகப் போய்க்கொண்டிருந்தான். அதற்கு அவசியம் உச்சி நேரம் வரை ஏற்படவில்லை.

கந்தமாறன் பார்த்திபேந்திரனிடம், "இன்றைக்கு இவ்வளவு வேட்டை ஆடியது போதாதா? இன்று ஒரு நாளிலேயே இந்தக் காட்டிலுள்ள விலங்குகளையெல்லாம் கொன்று தீர்த்து விடுவார் போலிருக்கிறதே. இவருடைய வேட்டை வெறி தணிவதற்குக் கொல்லி மலைக்குத்தான் போக வேண்டும். 'இன்றைக்குப் போதும் வீடு திரும்பலாம்' என்று சொல்லுங்கள்!" என்று கூறினான்.

(தொடரும்...)

# சிறுவர் அரங்கம்

## சுருக்கமும் உருக்கமும்



கிரேக்க நாட்டின் ஸ்பாட்டா நாட்டுக்காரர்கள் எப்பொழுதும் சுருக்கமாகவே பேசுவார்கள். தங்களைப் போன்றே பிறரும் பேச வேண்டும் என்று எதிர் பார்த்தனர்.

அந்த நாட்டிற்கு பக்கத் தில் உள்ள ஒரு தீவில் நான்கு ஐந்து ஆண்டுகளாக மழை பெய்யாததால் கடும் பஞ்சம் நிலவியது. அந் நாட்டு அரசன் பேச்சாற்றல் மிகுந்த தூதன் ஒருவனை ஸ்பாட்டா நாட்டிற்கு உதவி கேட்டு அனுப்பினான்.

வந்த தூதனை ஸ்பாட்டா நாட்டு மக்கள் வரவேற்றனர். அந்த தூதன் கடல் மடை திறந்த வெள்ளம் போல் தங்கள் நாட்டு மக்கள் பஞ்சத்தால் படும் துன்பத்தை இரண்டு மூன்று மணி நேரம் உருக்கமாக எடுத்துரைத்தான்.

பேச்சை முடித்ததும் ஸ்பாட்டா நாட்டினர் தம் மக்களுக்கு பெரும் உதவி செய்வார்கள் என்று எதிர் பார்த்தான். அவன் ஆனால் அவர்களோ ஒன்றும் பே[illegible] தொடங்கினார்கள்.

அதிர்ச்சியுற்ற தூதன் அவர்களின் முதியவர் ஒருவரை நிறுத்தி ஏதும் உதவி செய்வதாக சொல்லாமல் செல்கிறீர்களே என்று கேட்டான்.

அதற்கு அவர் நீண்ட நேரம் பேசினாய். உன் பேச்சில் தொடக்கம் எங்கள் நினைவுக்கு வந்தால் இடைப் பகுதி மறந்து விடுகிறது. அதேபோல் இடைப்பகுதி நினைவுக்கு வந்தால் முடிவுப் பகுதியும், முடிவுப் பகுதி நினைவுக்கு வந்தால் தொடக்கப் பகுதியும் மறந்து விடுகிறது. ஆக மொத்தத்தில் நீ என்ன பேசினாய் என்றே தெரியவில்லை. எங்களால் என்ன செய்ய முடியும் என்றார்.

இதைக் கேட்ட தூதன் ஏமாற்றத்துடன் தன் நாட்டு க்கு திரும்பி வந்து நடந்ததை எல்லாம் சொன்னான். அத்தீவுக்குரிய அரசன் வேறொரு தூதனை ஸ்பாட்டா நாட்டிற்கு அனுப்பினான்.

[illegible] வழக்கம் போல் ஸ்பாட்டா மக்கள் வரவேற்றனர். அத்தூதன் மக்களின் முன்னிலையில் தான் கொண்டு வந்திருந்த காலிச் சாக்கு மூட்டைகளை அவிழ்த்தான். அதற்குள் கையை விட்டு துலாவி ஒன்றுமில்லை என்று உணர்த்தினான். பிறகு ஒன் றும் பேசாமல் கன்னத்தில் கை வைத்து சோகமாக அமர்ந்து விட்டான். இதைக் கண்டு பெரியவர் ஒருவர் எழுந்தார்.

நம் பக்கத்து நாடு பஞ்சத்தால் வாடுகிறது. உதவி செய்ய வேண்டியது நம் கடமை என்றார். சிறிது நேரத்தில் பல வண்டிகளில் உணவு, தானியங்கள் ஏற்றப்பட் டன. அவற்றைப் பெற்றுக் கொண்ட தூதன் மகிழ்ச்சியுடன் விடை பெறுவதற்காக வந்தார்.

அவரிடம் அந்த பெரியவர் நீ காலிச் சாக்கை கொண்டு வந்தாய். அதை பார்த்த உடனே உங்கள் நாடு பஞ்சத்தால் வாடுகிறது என்பதை நாங்கள் புரிந்து கொண்டோம். பிறகு ஏன் அதற்குள் கையை விட்டு ஒன்றும் இல்லை என்று காட்டினாய். நீ தேவைக்கு அதிகமாக பேசுகிறாய், உன் பேச்சை குறைத்துக் கொள். இருந்தாலும் முதல் தூதரை விட நீ பரவாயில்லை என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குணங்களின் தன்மை மேன்மையடையும் போதே ஆசீர்வாதங்கள் நம்மை வந்தடைகின்றன.
- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருக்கேதீச்சரநாதனை வழிபாடாற்றிய ஜனாதிபதி அநுர

தேசிய தைப்பொங்கல் விழா இம்முறை வடக்கு மாகாணத்தில் மூன்று இடங்களில், ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் நேரடிப் பங்கேற்புடன் நடந்திருப்பது 2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் நிகழ்ந்திருக்கக் கூடிய அதி முக்கிய நிகழ்வாகும்.

ஆம், இந்த நாட்டின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தமிழர்களின் தைப்பொங்கல் விழாவில் நேரடியாகக் கலந்து கொண்டிருப்பது தமிழ் மக்களை அநுரவின் அரசு அரவணைத்துச் செல்லும் என்பதை குறித்துரைப்பதற்கானது.

அதிலும் தேசிய தைப்பொங்கலை மன்னார், வேலணை, மானிப்பாய் ஆகிய மூன்று இடங்களில் நடந்தியிருப்பது ஒரு வித்தியாசமான அணுகுமுறை எனலாம்.

தமிழ் மக்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் மாதோட்டத்தில் பாலாவியின் கரைமேல் அமைந்திருக்கக்கூடிய திருக்கேதீச்சரத்தில் தைப்பொங்கல் இடம்பெற்றிருப்பது தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில், அந்தந்த இனங்களின் வரலாறுகள் பேணிப் பாதுகாக்கப்படும் - அதற்குரிய முன்னுரிமை வழங்கப்படும் என்ற நிலைப்பாடும் இங்கு முன்னிறுத்தப்படுகிறது.

ஆம், திருக்கேதீச்சரம் அமைந்துள்ள மாதோட்டத் துறைமுகம் எங்கள் தமிழ்க்குடியின் தொன்மையை எடுத்தியம்புவது.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தர் திருக்கேதீச்சரநாதன் மீது தேவாரப் பதிகம் பாடினார் எனில், மன்னார் மாவட்டத்தின் பழைமையும் அதன் செழிப்பும் எத்துணை என்பது உணர்தற்குரியது.

ஆக, அத்தகு வரலாற்றுத் தொன்மையும் சிறப்பும்மிக்க திருக்கேதீச்சரத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தைப்பொங்கலைச் செய்திருப்பது இந்த நாட்டின் எதிர்காலம் மிகச் சிறப்பாக அமையும் என்பதற்கான நல்ல அறிகுறி எனலாம்.

உண்மை. இந்த உலகில் சிவநிந்தை ஈரேழு பிறப்பிற்கும் கன்மவினையாய் தொடர வல்லது. அதனாலேயே இராவண வதத்துக்குப் பின்னர், இராமபிரான்; சிவபூமியாகிய ஈழத்தில் - சிவபக்தனாகிய இராவணனை வதம் செய்த பாவத்தினின்றும் விமோசனம் பெறும் பொருட்டு, சிவபூசை செய்து சிவப்பரம் பொருளை வழிபட்டான் என இதிகாசங்கள் பேசுகின்றன.

ஆக, சிவபூமியாகிய ஈழத் திருநாட்டில் கடந்த காலங்களில் நடந்த சிவநிந்தையினின்றும் இலங்காபுரி பாவவிமோசனம் பெறும் வகையில், மன்னார் திருக்கேதீச்சரத்தில் தைப்பொங்கல் செய்து; அனைத்து தோசங்களையும் நிவர்த்திக்கும் வல்லமை பொருந்திய சூரிய பகவானை இந்த நாட்டின் ஆட்சித் தலைவராக இருக்கக்கூடிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வழிபாடாற்றியுள்ளார்.

இஃது தமிழ் மக்களை ஆதிக்குடிகளாகக் கொண்ட இச் சிவபூமியில் அதி உன்னத சௌபாக்கியங்களைத் தரும் என்பது சர்வ நிச்சயம்.

# தொல்லியல், மதம் என இனவாத அரசியல் எந்த வடிவில் வந்தாலும் இடமளியோம்

## தென்மராட்சி மண்ணில் ஜனாதிபதி அநுர சூளுரை

(மீசாலை)

தொல்பொருள் நிலையத்தை மையமாக வைத்தும் மதஸ்தானத்தை வைத்தும் இனவாத முறுகல் நிலையை ஏற்படுத்த சிலர் முனைகின்றார்கள். இலங்கையின் எந்தப் பகுதியிலும் எந்தவொரு இனவாதச் செயற்பாடுகளுக்கும் எமது அரசாங்கம் இடமளிக்காது என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தமக்கான இடம் - அழகான வாழ்க்கை எனும் தேசிய வீடமைப்பு வேலைத்திட்டத்தை நேற்று (16) மீசாலையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி,

சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் நீண்ட காலமாகப் பிரித்து வைத்திருந்தது சந்தேகமும் வைராக்கியமும்தான். அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகச் சிங்கள மக்களை ஒரு தரப்பினரும் பதவிகளுக்காகத் தமிழ் மக்களை மற்றுமொரு தரப்பினரும் உசுப்பேத்தினார்கள். இந்த இனவாத அரசியலினால் இறுதியில் எஞ்சியது அழிவுகளும் கண்ணீரும் மாத்திரமே.

யுத்தத்தில் என்ன மிஞ்சியது? வீடுகள் இல்லாத குடும்பங்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், உறவினர்களை இழந்தார்கள், பொருளாதாரத்தை இழந்தார்கள்.

வடக்கிலும் தெற்கிலும் இரண்டு பகுதிகளாக யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்கள்தான் மிஞ்சினார்கள்.

இன்றும் ஒரு தொல்பொருள் நிலையத்தை மையமாக வைத்து மதஸ்தானத்தை வைத்து இனவாத முறுகல் நிலையை ஏற்படுத்த முனைகின்றார்கள். நான் ஒரு உறுதிமொழி வழங்குகின்றேன். மீண்டும் எமது நாட்டில் வடக்கிலோ தெற்கிலோ கிழக்கிலோ நாட்டின் எந்தப் பகுதியிலும் சிங்களமா இருக்கட்டும் தமிழாக இருக்கட்டும் முஸ்லீமா இருக்கட்டும் எந்தவொரு இனவாதத்திற்கும் நாங்கள் இடமளிக்க மாட்டோம். நாங்கள் அனைவருமே சகோதரர்கள், ஒற்றுமையாக வாழவேண்டும் எனத் தெரிவித்தார். (ம-7)

## பேசாலை கடலில் மாயமான சிறுவனும் சடலமாக மீட்பு

### பலியானோர் எண்ணிக்கை 3 ஆக உயர்வு

மன்னார் பேசாலை கடலில் நேற்றுமுன்தினம் வியாழன் (15) மாலை நீராடச் சென்ற 4 சிறுவர்களில் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் ஒருவர் காணாமல் போயிருந்தார். காணாமல் போன சிறுவனை தேடும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந் நிலையில் காணாமல் போயிருந்த ஒரு சிறுவனின் சடலம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (15) இரவு கரை ஒதுங்கியுள்ளது.

இச் சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் பேசாலை, வசந்தபுரம், உதயபுரம் கிராமங்களை சேர்ந்த 16 முதல் 18 வயதுடையவர்கள் எனவும் உயிரிழந்த சிறுவர்களில் பாடசாலை மாணவர் ஒருவரும் உள்ளடங்குவதாக பேசாலை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின் வாயிலாக தெரியவந்துள்ளது.

இதேவேளை உயிருடன் மீட்கப்பட்ட சிறுவன் தொடர்ந்தும் மன்னார் மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்ற நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)

### ஜனாதிபதியின் யாழ். நிகழ்வுக்கு

## வலுச்சேர்க்க சென்ற பேருந்துகள் வலுவிழந்த பயணிகள் சேவை

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதியின் நிகழ்வுகளுக்காக அரச பேருந்துகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டதால், நேற்று (16) காலை முதல் பொதுப் போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதமடைந்து பயணிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகினர்.

குறிப்பாக பருத்தித்துறையிலிருந்து சேவையில் ஈடுபடும் அனைத்து சேவைகளும் நேற்றுக் காலை முதல் நிறுத்தப்பட்டிருந்தன.

இதுகுறித்து இலங்கை போக்குவரத்து சபையின் பருத்தித்துறை சாலை முகாமையாளரைத் தொடர்பு கொண்டு கேட்டதுபோது,

ஜனாதிபதியின் யாழ்ப்பாண நிகழ்சிக்காக தமது சாலைப் பேருந்துகள் பயன்படுத்தபட்டதாகவும் இதனால் காலை 10 மணியுடன் அனைத்து சேவைகளும் நிறுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

இதனால் வேலைகளுக்குச் சென்றவர்கள், நோயாளர்கள் மற்றும் பொதுமக்கள் நீண்ட நேரம் பேருந்து நிலையங்களில் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

### நீதிமன்றில் ஆஜராகத் தவறிய

## இளங்குமரன் எம்.பிக்கு மன்று அழைப்பாணை

கிராம அலுவலர் ஒருவரைத் தாக்கியமை தொடர்பிலான வழக்கில் நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறிய பாராளுமன்ற உறுப்பினர் கருணைநாதன் இளங்குமரனை எதிர்வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு பதில் நீதிவான் எஸ். சிவபாலசுப்பிரமணியம் நேற்று (16) உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, கிராம அலுவலர் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார். எனினும் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன் நீதிமன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

அவர் சார்பாக ஆஜரான சட்டத்தரணி ஜனாதிபதியின் நிகழ்வொன்றில் கலந்துகொள்வதால் இளங்குமரன் எம்.பியால் நீதிமன்றிற்கு வர முடியவில்லை என்றும் தெரிவித்தார்.

இதற்குக் கடும் ஆட்சேபனை தெரிவித்த ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்ட ஒருவர் குறித்த தவணை தினத்தில் நீதிமன்றில் நேரில் முன்னிலையாக வேண்டியது சட்ட ரீதியான கடமையாகும். அதனைத் தவிர்த்து சட்டத்தரணியை மட்டும் அனுப்பி வைப்பது நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும் எனச் சுட்டிக்காட்டினார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த பதில் நீதிவான் வழக்கை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு ஒத்திவைத்ததுடன் அன்றைய தினம் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரனை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்துமாறு பொலிஸாருக்கு கட்டளையிட்டார். (ம-7,316)

## ஜிந்துப்பிட்டியில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஜிந்துப்பிட்டி பகுதியில் நேற்று நடந்த துப்பாக்கிச் சூட்டில் மூவர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பகுதிக்கு முச்சக்கரவண்டியில் வந்த இனந்தெரியாத நபர் ஒருவர், அங்கிருந்தவர்களை இலக்கு வைத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மூவரும் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் துரித விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழப்பநிலையில் மாகாண சபைத் தேர்தல்கள் ஒரு பார்வை

04



கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

உதாரணமாக ஒரு தொகுதியில் சனத்தொகை 10,000 பேராகவும் மற்றைய தொகுதியில் சனத்தொகை 50,000 பேராகவும் இருப்பின் முதலாவது தொகுதி வாக்காளரின் பலம் இரண்டாவது தொகுதி வாக்காளரின் பலத்தைப் போல் 5 மடங்காகும்.

அதுமட்டுமல்ல மாகாண சபை அங்கத்தவருக்கு வழங்கப்படும் ஒதுக்கீட்டில் மக்களுக்கு கிடைக்கும் பலன் 5 மடங்கு வித்தியாசமாக இருக்கும். எனவே தொகுதிகள் எல்லை நிர்ணயம் செய்யும் போது தொகுதிகளில் உள்ள சனத்தொகை எண்ணிக்கை கிட்டத்தட்ட சமமாக இருக்கும் வண்ணம் எல்லை நிர்ணயம் செய்யப்படல் வேண்டும் என்பதே அடிப்படையாகும். இச் சட்டவரம்பு சிறுபான்மைச் சமூகங்களுக்கு சிறிய தேர்தல் தொகுதிகளை ஒதுக்குவதற்கு இடைஞ்சலாக இருந்தது

2012 ஆம் ஆண்டிற்கான இறுதி மக்கள் தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பையும் கருத்திலெடுத்து, தேர்தல்கள் ஆணையாளரினால் தீர்மானிக்கப்பட்ட மாகாணசபையொன்றின் ஒவ்வொரு நிர்வாக மாவட்ட மட்டத்திலிருமிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையின்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50 சதவீதத்திற்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை எல்லை நிர்ணயக்குழு தீர்மானித்தது. இவை அட்டவணை A இல் காட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவுசெய்யப்படவேண்டிய அங்கத்தவர்களின் எண்ணிக்கை, அந்தந்த மாவட்டத்திலிருந்து ஒரு உறுப்பினரை தெரிவு செய்ய தேவையான சனத்தொகை சதவீதம் மற்றும் அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு இனங்களின் சதவீதத்தையும் கணக்கிட்டு பார்த்தால் ஒவ்வொரு இனங்களிலிருந்தும் எத்தனை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படவேண்டும் என்பதை எவரும் கணக்கிட்டு கொள்ள முடியும்.

எல்லை நிர்ணய அறிக்கையுடன் இதனை ஒப்பிட்டால் வடக்கு மற்றும் கிழக்கைப் பொறுத்தவரையில் தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கு எந்தவொரு அநீதியும் இழைக்கப்படவில்லை என்பது தெரியவரும். மன்னாரில் இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டதாக எல்லை நிர்ணயக் குழு கருதிய போதும் சட்டவரம்புகளை மீறி எல்லை நிர்ணயக் குழுவினால் எதுவும் செய்ய முடியாது போனது குறிப்பிடத்தக்கதாகும். இதுபற்றி அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்கூறிய அட்டவணையின்படி கணக்கிடும்போது களுத்துறை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, குருநாகல், அநுராதபுரம், பொலன்னறுவை மற்றும் மொனறாகலை ஆகிய 8 மாவட்டத்திலிருந்து ஒரு தமிழராவது தெரிவுசெய்யப்படுவதற்கு தொகுதிகள் ஒதுக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிகக் குறைவு என்பதைக் காணலாம்.

இதேபோல் நுவரெலியா, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு, வவுனியா, பொலன்னறுவை, பதுளை, மொனறாகலை, கேகாலை மற்றும் இரத்தினபுரி ஆகிய 11 மாவட்டத்திலிருந்து ஒரு முஸ்லிம் அங்கத்தவராவது தெரிவுசெய்யப்படுவதற்கு தொகுதிகள் ஒதுக்குவதற்கான சாத்தியக்கூறுகள் மிகமிகக் குறைவு என்பதைக் காணலாம்.

சட்டத்தில் மேலும் கூறப்பட்டிருந்தது என்னவென்றால் "ஒரு நிர்வாக மாவட்டத்தின் ஏதேனும் பிரதேசத்தில், இன, மத அல்லது வேறுவகையான அக்கறைப் பிணைப்பினால் ஒன்று சேர்க்கப்பட்ட, ஆனால் அப் பிரதேசத்திலுள்ள பெரும்பான்மையினரான வாசிகளிலிருந்து ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இந்த அம்சங்களில் வேறுபடுகின்ற கணிசமான அளவினரான ஆட்கள் உள்ளனரெனக் குழுவுக்குத் தோன்றுமிடத்து, குழுவானது, அத்தகைய நிர்வாக மாவட்டங்களைத் தேர்தற்றொகுதிகளாகப் பிரிவிடலாம்."

இச் சட்டத்தை பயன்படுத்தி எல்லை நிர்ணயக் குழு பல தேர்தல் தொகுதிகளை உருவாக்கியது குறிப்பிடத்தக்கதாகும். இதுபற்றி பல விமர்சனங்கள் பாராளுமன்றத்தில், நடைபெற்ற கட்சிக் கூட்டங்களில், பத்திரிகைகளில் மற்றும் பொது மேடைகளில் எழுந்தன.

அவற்றுள் சில: "கேகாலை மாவட்டத்தில் முஸ்லிம் சமூகத்தின் சனத் தொகை ஒரு உறுப்பினரை தெரிவுசெய்வதற்கு போதாமல் இருந்தும் மாவனெல்லை பிரதேசச் செயலாளர் பிரிவைப் பிரித்து ஒரு தொகுதிக்குள் முஸ்லிம் சமூகத்தின் எண்ணிக்கை கூடியது ஏன்?".

" ஐந்து பிரதேசச் செயலாளர் பிரிவுகளைப் பிரித்து கஹவத்தை தொகுதி உருவாக்கப்பட்டது என்ன அரசியல் நோக்கத்திற்காக" , "தொகுதிகள் இன ரீதியாக பிரிக்கப்படுவதை எதிர்க்கிறோம்"

"பூஜாபிட்டிய இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது" போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

கஹவத்தை தொகுதி அவ்வாறு பிரித்து உருவாக்கப்பட்டதற்கான காரணம் அத்தொகுதியில் தமிழ் சமூகத்தின் எண்ணிக்கையை 31% ஆக அதிகரிப்பதற்கே. மற்றையது பூஜாபிட்டிய பிரதேசச் செயலாளர் பிரிவிலிருந்த முஸ்லீம் சமூகத்தை அக்குறனையுடன் சேர்த்து முஸ்லீம் சமூகம் தேர்தலில் வெல்லக்கூடியதாக ஒரு தொகுதி உருவாக்குவதற்கேயாகும். இவ்வாறு பிரிக்கப்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்த்து சிறுபான்மையினம் வெல்லக்கூடியதாக பல தொகுதிகள் உருவாக்கப்பட்டன.

இதே முறையில் சிறுபான்மையினத்திற்கு கிடைக்க வேண்டிய தேவையான அளவு தொகுதிகளை உருவாக்க முடியாமல் போனதற்குக் காரணம் சட்டத்தில் கூறப்பட்ட இன்னுமொரு பகுதியாகும். அதில் கூறப்பட்டுள்ளது என்னவென்றால் " அத்தகைய பிரிவிடுகையைச் செய்வதில், ஆணைக்குழு, பின்வருவனவற்றைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும்:- (i) மாகாணத்திற்குள்ளான நிர்வாக மாவட்டங்களின் பல்வேறு தேர்தல் தொகுதிகளில் வதிகின்ற ஆட்களின் எண்ணிக்கையிலான அளவொவ்வாமையை மிகக் குறைவானதாக்குவதன் விருப்புத்தன்மை அத்துடன் (ii) தேர்தல் தொகுதிகளின் புவியியல்சார் மற்றும் பௌதீகச் சிறப்புக்கூறுகள்."

இதில் மீண்டும் வாக்கின் சமபலத்தை பேணுதல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இதனால் குழுவால் சிறிய சனத்தொகையைக் கொண்ட தொகுதிகளை உருவாக்க முடியாமல் போய் விட்டது.

இருந்தும் சிறுபான்மைச் சமூகத்தை ஒன்று சேர்த்து தொகுதிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவ்வாறு உருவாக்கப்பட்ட தொகுதிகளில் சிறுபான்மைச் சமூகம் தேர்தலில் வெற்றி பெறாவிட்டாலும் அச் சமூகம் ஒரு கட்சியின் வெற்றியை தீர்மானிக்கக் கூடிய சக்தியாக இருக்கும் என்பதே எல்லை நிர்ணயக் குழுவின் கருத்தாக இருந்தது.

அட்டவணை A யைப் பார்க்கும்போது குருநாகல், அநுராதபுரம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் கட்டாயமாக ஒரு முஸ்லிம் தெரிவுசெய்யப்படக் கூடியதாக தொகுதி பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஏன் பிரிக்கப்படவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் அம் மாவட்டத்தில் பரந்து வாழ்ந்ததேயாகும். உதாரணமாக அநுராதபுர மாவட்டத்தை எடுத்தால் ஒரு தொகுதிக்கு வேண்டிய சனத்தொகை 78234 முஸ்லீம்களின் சனத்தொகை 70692. இதன்படி கட்டாயமாக ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும். ஆனால் முஸ்லிம் சமூகம் அநுராதபுர பிரதேசச் செயலாளர் பிரிவுகள் யாவற்றிலும் பரந்து வாழ்கிறார்கள். இதனை அட்டவணை B காட்டுகிறது. இதனால் அவர்களை ஒன்றிணைத்து தொகுதி உருவாக்கமுடியவில்லை.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

சாவகச்சேரி மீசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைத்திருந்தார்.

மேற்படி செயற்றிட்டத்தின் ஆரம்பமாக மீசாலை கிழக்கு J/318 கிராம அலுவலர் பிரிவில் வீடொன்றிற்கான அடிக்கல்லை நாட்டிவைத்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலையில் இடம்பெற்ற வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான காசோலைகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேற்படி நிகழ்வில், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வீடமைப்பு நிர்மாணம் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர் எச்.எம். சுனில் ரணசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களின் மாவட்ட செயலர்கள் அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ம-7,30)

## உள்ளக...

குமார திஸாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

சாவகச்சேரி மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மைதானத்தில் நேற்று வீட்டுத்திட்ட மானியத்திற் கான காசோலைகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணத்தில் பாரிய விளையாட்டு மைதானமொன்றை நிர்மாணிக்க திட்டமிட்டுள்ளோம். அதில் சில சிக்கல்கள் உருவாகியுள்ளன. அதனை எவ்வாறு தீர்ப்பது என்பது குறித்து நேற்று (நேற்று முன்தினம்) மாவட்ட செயலாளருடன் கலந்துரையாடினேன்.

அதற்கான பணிகளை இந்த வருடத்திற்குள் துரிதமாக நிறைவு செய்யவுள்ளோம். பிள்ளைகளுக்கு விளையாடுவதற்காக, அவர்களுக்கு தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்த, பொழுதுபோக்காக வாழக்கூடிய வாய்ப்பை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் உள்ளக விளையாட்டரங்கொன்றை உருவாக்க திட்டமிட்டோம். ஆனால் அரசியல்வாதிகளின் ஊடாக வழக்கு தொடரப்பட்டது. யாழ்ப்பாணப் பிள்ளைகளுக்கு அது அவசியமானது. ஆனால் அரசியல்வாதிகள் வழக்குத் தொடர்கின்றனர். அதாவது அவர்கள் மக்களுக்கு எதிரான அரசியலை செய்கிறார்கள்.

நாம் மிக விரைவில் அந்த வழக்கை நிறைவு செய்து அதே இடத்திலோ அல்லது அதற்கு அண்மித்த பகுதியிலோ அந்த உள்ளக விளை யாட்டரங்கின் பணிகளை நிறைவு செய்ய எதிர்பார்க்கிறோம் என்றார். (ம-7)

## பலாலி, காங்...

மைதானத்தில் நேற்று இடம்பெற்ற வீட்டுத்திட்ட மானியத்திற்கான காசோலைகள் வழங்கும் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

சுற்றுலாத் துறையை மேம்படுத்தக்கூடிய அழகிய கடற்கரைகளும் பல கவர்ச்சிகரமான இடங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ளன. அதற்காக பலாலி விமான நிலையத்தைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் காங்கேசன்துறை துறைமுகப் பணிகளை உடனடியாகத் தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இதற்காக இந்திய அரசாங்கம் 60 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். (ம-7)

## தேங்காய்...

பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த தம்பிராசா ஜெயச்சந்திரன் (வயது-60) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த 12ஆம் திகதி கொக்கத்தடி மூலம் தேங்காய் பிடுங்க முற்பட்ட போது அவர் தலைமீது தேங்காய் விழுந்துள்ளது.

தொடர்ந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பலனின்றி நேற்று மரணமடைந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7,60)

## யாழில்...

இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

உங்களுக்குப் பரிசுப்பொருட்கள் விழுந்துள்ளன, போனஸ் புள்ளிகள் கிடைத்துள்ளன, உங்களுக்கு இலட்சக்கணக்கில் பணம் கிடைக்கப் போகின்றது, உங்கள் வங்கிக் கணக்கு இலக்கம், அடையாள அட்டை இலக்கம், தொலைபேசி இலக்கங்கள் என்பவற்றைத் தாருங்கள் எனப் பெற்று மோசடியில் ஈடுபடுகின்றனர்.

இது தொடர்பில் பொதுமக்கள் விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர். (ம-7)

## நயினைத்...

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்றுச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார்.

நயினாதீவுக்கு உலங்குவானூர்தி மூலம் சென்ற ஜனாதிபதி நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்திற்கும் சென்று வழிபாடுகளை மேற்கொண்டார். (ம-7)

## நயினா...

யாழ்ப்பாணத்திற்கு இரண்டு நாள் விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நயினாதீவுக்குச் சென்று ரஜமஹா விகாரை விகாரதிபதியை சந்தித்து ஆசிகளைப் பெற்றுக் கொண்டார்.

ஜனாதிபதி தன்னிடம் நேரில் வரவில்லை என அண்மையில் நயினாதீவு நாக விகாரை விகாராதிபதி அதிருப்தி தெரிவித்திருந்த நிலையில் நேற்று ஜனாதிபதி விகாரதிபதியை சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

அதேவேளை தையிட்டி விகாரை பொறுப்பை தன்னிடம் தந்தால் விகாரை அமைந்துள்ள சுமார் 1.2 ஏக்கர் தனியார் காணிகளுக்கு மாற்றீடாக தையிட்டி விகாரைக்குச் சொந்தமான காணிகளில் மாற்றுக் காணிகளை வழங்கி தையிட்டி விகாரைப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கத்தயார் என அண்மையில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்ததுடன் தையிட்டி பகுதிக்கு நேரில் சென்று பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களை நேரில் சந்தித்தும் நயினாதீவு விகாராதிபதி கருத்துக்களைத் தெரிவித்து இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2026.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 6076
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 8 0 8 7 0 9
அத சம்பத
ஆங்கில எழுத்து Q வெற்றி இலக்கங்கள் 8 7 0 9
சீட்டிழுப்பு இலக்கம் 0651
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 182
மீனம் 37 40 55 8348

தன நிதானய
திகதி - 2026.01.16
சீட்டிழுப்பு இலக்கம் - 2106
L 35 40 48 56 L
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 16/01/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2424
U 05 05 12 39 59

ஜய JAYA
திகதி 2026.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 0344
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
G 2 9 2 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4318
சீட்டிழுப்பு திகதி 16.01.2026
ஆங்கில எழுத்து P வெற்றி இலக்கங்கள் 04 29 40 70
P
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 1385
மீனம் 03 19 22 55 மீனம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.01.2026 வெற்றி வாரம் 0784
ஆங்கில எழுத்து W மற்றும் வெற்றி இலக்கம் 9 3 7 4 1 0
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,020,607.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3050
சீட்டிழுப்பு திகதி 2026.01.16 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 37 38 48 69 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,144,894.40
DLB

சனிதா
திகதி 16.01.2026 வெற்றி வாரம் 5211
வெற்றி இலக்கங்கள் 09 10 52 56 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,939,848.00
செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/-
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 880
சீட்டிழுப்பு திகதி 16.01.2026
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 16 33
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,561,120.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4762
சீட்டிழுப்பு திகதி 16.01.2026 தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 44 45 56 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.8,672,098.80
DLB

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
F 30 30 33 74 75
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 2226
16.01.2026 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.621,034,059.80
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2876
சீட்டிழுப்பு திகதி: 2026.01.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,818,686.40
வெற்றி இலக்கங்கள் 05 37 59 70 B
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 195/= | Max 3 Kg |
| 1Kg கோதுமை மா | - 148/= | Max 5Kg |
| 1Kg சிவப்பு பருப்பு | - 249/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 270/= | |
| 1Kg தீட்டல்ப் பச்சை | - 229/= | |
| 1Kg சர்க்கரை | - 235/= | |
| 1Kg றவை | - 282/= | |
| 10Kg விஜிதா நாடு அரிசி | - 2670/= | Max 01 |
| 1Kg கடலை | - 350/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 253/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~90/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240/=~~ |




தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும். (1941)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. 0777 8080 30


# நிலத்தடி நீரைப் பாதுகாக்க கிராய், இடிகுண்டு குளங்கள் தூர்வாரப்பட வேண்டும்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் எல்லைக்குள் கைதடி வடக்கு வட்டாரத்தில் அமைந்துள்ள இடிகுண்டு குளமானது நிலத்தடி நீரின் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் நலன் ஆகியவற்றை கருத்திற்கொண்டு முழுமையாக தூர்வாரப்பட வேண்டும் என சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினரும் கைதடி மத்தி கமக்கார அமைப்பின் தலைவருமான க.சிவபாதம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர்,

கைதடி தெற்கு வட்டாரத்தில் அமைந்துள்ள கிராய் குளமானது கைதடி மற்றும் நாவற்குழி கிராமங்களை நீர் நிலை ஊடாக இணைக்கும் குளமாக உள்ளது.

எனவே கைதடி தெற்கு நிலத்தடி நீரின் பாதுகாப்பு மற்றும் நாவற்குழி விவசாயிகளின் நலன் ஆகியவற்றை கருத்திற்கொண்டு கிராய் மற்றும் இடிகுண்டு குளங்களை முழுமையாக தூர்வாரி புனரமைக்க சாவகச்சேரி பிரதேச சபை, விவசாயத் திணைக்களம் மற்றும் வேள்ட்விசன் போன்ற அமைப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-7,30)


## மணல் விற்பனை/ பொமிட் போட்டுத் தரப்படும்

கட்டிட வேலைகளுக்கு அரச அங்கீகாரம் பெற்ற பழுப்பு நிற பூச்சு மணல் விற்பனைக்கு உண்டு. யாழ். மாவட்டத்திற்கு 65,000 இருந்து.. மற்றும் கனரக வாகனங்களுக்கு யாழ். மாவட்ட வீதி அனுமதிப்பத்திரம் போட்டுத் தரப்படும். (6582)

076 324 9977

## வட இந்திய யாத்திரை

### காசி அயோத்தி சீரடிபாபா யாத்திரை

ஆரம்பம் : 10.03.2026 நாட்கள் : 15 யாத்திரிகர்கள் : 15

தரிசிக்குமிடங்கள்

டெல்லி, அட்சயதாம். நாராயணர் கோவில், இந்திராகாந்தி வீடு, இந்தியா கேற். வேறு இடங்களும் பார்க்கலாம். ஆக்ரா, தாஜ்மகால், செங்கோட்டை, மதுரா, கிருஷ்ணஜென்ம பூமி. பிரேம்மந்திரம், அலகாபாத், கங்கா, ஜமுனா, சரஸ்வதி, திருவேணி சங்கமம், சயன ஆஞ்சனேயர், நேரு வீடு, சங்கராச்சாரியார் மண்டபம், கயா, முன்னோர்களுக்கு பிதுர்கடன் சிரார்த்தம் செய்யும் இடம், புத்தகாய, புத்தாலயங்கள். காசி விஸ்வநாதர், விசாலாட்சி, காலபைரவர் உட்பட 15 இடங்கள் தரிசனம்

மாலை 6.30 இற்கு கங்கா ஆர்த்தி பார்த்தல் காசியில் 3 நாட்கள் தங்கி சீரடி பாபா தரிசனம்,சனி சிங்கனாப்பூர், இன்னும் பல இடங்களும் போகலாம். சீத்தாமடி, சீதை பூமியுள் புதையுண்ட இடம், திரியம்பகேஸ்வரர், ஜோதிலிங்கமும் மற்றும் இராமேஸ்வரம் 21 தீர்த்தமாடல், இராமேஸ்வரலிங்க வழிபாடு (சிவதரிசனம்), நவபாஷாணம், திருப்புலானி. உத்தரகோச மங்கை பார்த்து மதுரை மீனாட்சி தரிசனம் முடித்து சென்னை வருகை.

ஒரு நாள் சென்னையில் சொப்பிங் செய்யலாம். மறுநாள் நாடு திரும்பல்

பெற்றுக்கொள்ளும் பணத்திற்கான எமது சேவைகள்

5விமானப் பயணங்கள். 3 வேளை பிராமண சமையல் ஆட்கள் சமைத்த சைவ உணவு, ரீ, கோப்பி, மினரல் வோட்டர், AC வாகன வசதி. 2 பேருக்கு கட்டில் மெத்தை, வெஸ்ரேன் கொமட், இணைந்த குளியலறை மேலும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்லவும் பயணம் முடிய திரும்பி யாழ்ப்பாணம் வரவும் வாகன ஒழுங்கு வசதிகள் செய்து தரப்படும். மேலும் விபரங்களைக் கேட்டுப் பதிவு செய்யவும்.

விபரங்களுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு -11. 077 736 2154
E-mail - sriranganathan2601@gmail.com (1901)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் - அரியாலை ஆனந்தம் வடலி வீதியில் (AV வீதி) 3ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 1½ பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்
- AV வீதி முகப்புடன்
- யாழ்ப்பாண பஸ் நிலையம் 4 Km
- ஒரு பரப்பின் விலை 60 இலட்சம்.
- A9 வீதியிலிருந்து 400m தூரம்.

(1939)

தொடர்பு:-
076 860 2770, 076 987 8617

## மாப்பிள்ளை தேவை

01.திருநெல்வேலி, இந்து, 2001, ரேவதி, MSc Software Engineer, vegetarian பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54903)
02. கோப்பாய், இந்து, 1997, ரோகினி, Masters in Business administration, vegetarian பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54271)
03. மீசாலை, இந்து, 1997, ரேவதி, BSc, Banker, vegetarian பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (51733)
04. காரைநகர், இந்து, 1997, அனுஷம், Account Management, Accountant பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (56981)
05. நல்லூர், இந்து, 1993, அனுஷம், Electronic communication Engineering, system engineer பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55341)
06. குருக்கல்மடம், இந்து, 1998, உத்தராடம், BSc in IT, Software Engineer, Permanent lecturer பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (54133)
07. உரும்பிராய், இந்து, 1999, மகம், Finance and Economics, Audit analyst, Australia citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (53572)
08. தெல்லிப்பழை, இந்து, 1994, பூராடம், MBBS, Doctor, Norway citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (56270)
09. கொக்குவில், இந்து, 1996, பூரட்டாதி, Electrical Engineering, Electrical Engineer, USA citizen பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (55426)
10. வடலியடைப்பு, இந்து, 1994, பூசம், BSc Associate consultant பெண்ணிற்கு மாப்பிள்ளை தேவை. (33480)

(1944)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 076 528 4510

## வேலைவாய்ப்பு

மா, தூள் அரைத்தல், மா வறுத்தல் வேலையாட்கள் தேவை. (1942)

சம்பளம் :பெண் : 1500/= - 2500/= வரை
ஆண் : 2500/= - 3500/= வரை

077 936 1356

## வேலையாட்கள் தேவை

- மேசன் (அனுபவமுள்ளவர்கள்) – Rs. 3500.00
- மேசன் உதவியாளர் – Rs. 2500.00
- வெல்டர் – Rs. 3500.00
- வெல்டர் உதவியாளர் – Rs. 3000.00
- தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) – Rs. 3500.00

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
தொடர்பு : 0777 245 399 (காலை 8.00 – மாலை 5.30 வரை)
யாழ்ப்பாணம். (6581)

## வேலையாட்கள் தேவை

- தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TO)HND or NCT - Civil
- கனிய அளவையியலாளர் (QS)HND or NCT QS
- உதவி கனிய அளவையியலாளர் (AQS)
- உதவி தொழில்நுட்ப உத்தியோகத்தர் (TA)

(6581)

சுயவிபரக்கோவையை Whatsapp/ Email மூலம் அனுப்பி வைக்கவும். 0777 245 399 (Whatsapp)
aonebuilder2001@hotmail.com
யாழ்ப்பாணம்.

## அழகுக்கலை நிபுணர் தேவை

யாழ். நகரில் அழகுக்கலை நிலையத்திற்கு பெண் வேலையாட்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். Pedicure அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (6585)

071 994 1185

## வாகன சாரதி தேவை

உரும்பிராயில் அமைந்துள்ள சூப்பர் மாக்கட் ஒன்றிற்கு பட்டா ஓடக் கூடிய சாரதி தேவை. வயதெல்லை : 35 – 55, உரும்பிராய் பிரதேசத்தை அண்மித்தவர்களாக இருக்க வேண்டும். (1941)

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
077 3777 475

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு Farm School க்கு அண்மையில் 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (singer company க்கு முன் பக்கம்) (1943)

077 601 1135


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org